# உதயன்

விலை ரூபா 7.00

Registered as a Newspaper

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 23 புதன்கிழமை (09-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:316


### நண்பகலில் ஒரு மணிநேரம் குடாநாடு ஸ்தம்பிக்கும்

# கைதிகள் உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக இன்று யாழ்ப்பாணம் முழுவதும் போராட்டங்கள்

### வாகனங்களை அந்தந்த இடங்களில் நிறுத்தவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.9

ஸ்ரீலங்கா சிறைகளில் விசாரணைகள் ஏதும் இன்றி வாடும் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும் -

அவர்கள் தற்சமயம் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் - குடாநாட்டில் இன்று நண்பகல் ஒரு மணிநேரம் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

சகல திணைக்களங்கள், பாடசாலைகள், கூட்டுறவுத்துறை அமைப்புகள், வங்கிகள், மகளிர் அமைப்புக்கள், வர்த்தக, பொது நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோர் நண்பகல் 12 மணிக்கு தமது செயற்பாடுகள் அனைத்தையும் நிறுத்தி பணிமனைகளுக்கு முன்பாக ஒரு மணி நேரம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

குடாநாட்டு வீதிகளில் செல்லும் வாகனங்கள் அனைத்தும் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு அந்தந்த இடங்களிலேயே நிறுத்தப்படும். ஒரு மணிநேரத்துக்கு வீதிகளில் எந்த வாகனப் போக்குவரத்தும் இடம்பெறாது. இதனால் குடாநாட்டில் இந்த ஒரு மணிநேரமும் சகல சேவைகளும் ஸ்தம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் சகல மனிதநேய அமைப்புக்களின் முக்கிய பிரதிநிதிகளும் நண்பகல் 12 மணி முதல் 2மணிவரை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகம் முன்பாக அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தி மகஜர் ஒன்றைக் கையளிப்பர்.

இன்று பாடசாலைகளில், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் காலைப் பிரார்த்தனையின் போது அதிபர் அல்லது ஆசிரியர் ஒருவர் மனித உரிமை மீறல்கள் பற்றியும் தமிழ் கைதிகளின் விடுதலை பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கவும் ஏற்பாடாகியுள்ளது.(ம-3-10-173)

# தமிழ்க் கைதிகள் விடயம் குறித்து இன்று பிரதமர் மந்திராலோசனை!

## அதன்பின் அரசுப் பிரதிநிதியாக மிலிந்த களுத்துறைச் சிறைக்கு நேரில் விஜயம்

கொழும்பு,ஒக்ரோபர்9

**சிறையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கும் தமிழ்க் கைதிகளின் விடயம் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று அலரி மாளிகையில் முக்கிய அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள், எம்.பிக்கள் ஆகியோருடன் மந்திராலோசனை நடத்துகின்றார்.**

**அதன்பின்னர் அரசுப் பிரதிநிதியாக அமைச்சர் மிலிந்த மொறகொட களுத்துறைச் சிறைக்கு நேரில் விஜயம் செய்து, அங்கு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ்க்கைதிகளுடன் பேச்சு நடத்துவார் எனத் தெரியவருகின்றது.**

தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றத்தில உள்ள பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தனர். உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க் கைதிகள் விடயம் குறித்து பிரதமருடன் அவர்கள் கலந்துரையாடினர்.

இதனையடுத்து இந்த விடயம் குறித்து இன்று காலை 10 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்தில் முக்கிய கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்குப் பிரதமர் உத்தரவிட்டார்.

இந்தக் கூட்டத்துக்கு சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனும் அழைக்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் ஜயலத்தும் மன்னார் ஆயரும் இன்று சிறைக்கு விஜயம்

கொழும்பு,ஒக்.9

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளிடம் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா இன்று காலை செல்கிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### உண்ணாவிரதத்தில் நாம் உயிரிழந்தால்

## பேராதனை மருத்துவபீடத்துக்கு எமது உடலை ஒப்படையுங்கள்!

### தமிழ்க் கைதிகள் அரசுக்கு மகஜர்

கொழும்பு,ஒக்.9

"நாம் இறந்தால் எமது உடலைப் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு ஒப்படையுங்கள்!"

- இவ்வாறான உருக்கமான கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றனர் களுத்துறைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் பத்துத் தமிழ்க் கைதிகள். தமது இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை நேற்று சிறைச்சாலை ஆணையாளருக்கு அவர்கள் அனுப்பிவைத்தனர்.

மிகவும் நலிந்து, பலவீனமுற்று, செயலற்ற நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்தக் கைதிகளினால் ஒப்பமிடப்பட்ட இந்த மகஜரை சிறைச்சாலை ஆணையாளர் ஊடாக அரசுக்கு அனுப்புமாறு கைதிகள் சார்பாகக் கோரப்பட்டது. இதற்கிடையில் -

(14ஆம் பக்கம் பார்க்க)

## தங்கம் வென்றார் சுசந்திகா ஜெயசிங்க



14ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான 100மீற்றர் ஓட்டத்தில் இலங்கை குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க தங்கப்பதக்கம் வென்றார். இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கைக்குக் கிடைத்த முதலாவது தங்கப் பதக்கம் இதுவாகும்.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதல சுற்றில் 11.16 செக்கன்களில் ஓடி ஆசிய விளையாட்டு விழாவில் புதிய சாதனை படைத்தார் சுசந்திகா. அதன்பின் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 11.15 செக்கன்களில் ஓடி மற்றொரு புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தை அவர் வென்றார். இதுவரை 11.27 செக்கன்களில் ஓடியமையே சாதனையாக இருந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்க் கைதிகளை விடுவிப்பதில்

# கூட்டமைப்பு கபட நாடகமா? தமிழ்மக்கள் பலத்த சந்தேகம்

உண்ணாவிரதம் இருப்பவர்கள் உட்பட தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்கும் விடயத்தில் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு கபட நாடகம் ஆடுகிறதா? இப்படி தமிழ்ப் பொதுமக்களிடையே பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் தாமும் சேர்ந்து மேற்கொண்ட தீர்மானத்தின்படி நேற்று கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்யவில்லை. அதனாலேயே தமிழ் மக்களுக்குச் சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக நாடாளுமன்றத்தில் எழுப்புவது என்றும், கைதிகளின் விடுதலைக்கு அரசாங்கம் சாதகமாகப் பதிலளிக்காவிட்டால் கூட்டமைப்பு எம்.பிக்கள் (அறிக்கை விட்டு விட்டு) வெளிநடப்புச் செய்வது என்றுமே நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஆனால், நேற்று நாடாளுமன்றத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### விடத்தற்பளையில் பெண்களுடன்

## சேஷ்டை புரிய முயன்ற சிப்பாய் மடக்கிப் பிடிப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.9

மிருசுவில், விடத்தற்பளைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு புகுந்த சிப்பாய் ஒருவர் அங்கு நித்திரையில் இருந்த பெண்களுடன் சேஷ்டை புரிய முற்பட்டதாகக் கூறப்படுகிறது. அவரை அயல் பிரதேச மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

(2ஆம் பக்கம் பார்க்க)

# கைதிகளை விடுவிக்கக் கோரி நேற்று வவுனியாவில் பெரும் ஆர்ப்பாட்டம்

### கண்டி வீதியில் பொலீஸ் கெடுபிடி; மாணவர் கல்வீச்சு

வவுனியா,ஒக்.9

தென்பகுதி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி உடனடியாக விடுதலை செய்யக்கோரி, வவுனியாவில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணியும், வீதி மறியற் போராட்டமும் நடைபெற்றன.

காலை 10 மணிக்கு யாழ்வீதியில தாண்டிக்குளம் பகுதியிலும், கண்டி வீதியில் மகா வித்தியாலய முன்றிலிலும், மன்னார் வீதியில் குருமண்காட்டுச் சந்தியிலும் ஹொரவப் பொத்தானை வீதியில் இறம்பைக் குளத்திலும் இருந்து பேரணிகள் ஆரம்பமாகின. கோஷங்களை எழுப்பியவாறு வீதியில் எந்தவொரு வாகனத்தையும செல்லவிடாது பேரணிகள் நகரை நோக்கி வந்தன.

கண்டி வீதியால் வந்த பேரணி,

(13ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கைதிகளுக்கு ஆதரவான போராட்டத்திற்கு குடாநாட்டின் பல அமைப்புக்களும் ஆதரவு!

## சகலரையும் பங்கேற்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக.9

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக குடாநாட்டில் இன்று இடம் பெறவுள்ள போராட்டத்துக்கு பல அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஆதரவு தெரிவித்துள்ள அமைப்புக்களின் அறிக்கைகள் விவரம் வருமாறு:-

### தமிழர் விடுதலைக் கூட்டணி

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு பாராமுகத்துடன் இருப்பதனையிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் வேதனையடைகின்றது. இந்த மனித நேய மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மதியம் 12.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை யாழ்ப்பாணம், சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்ட அடையாள எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி இணைந்து நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எமது கட்சி ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவரையும் இவ் அடையாள எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு மேற்படி கைதிகளை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கு ஒத்துழைக்குமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது கட்சி ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட அழைப்பை அனுப்புவதற்கு கால அவகாசம் போதாமையால் இச் செய்தியை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் திரண்டுவந்து இந்த அடையாளப் போராட்டத்தில் கலந்து தமிழ் மக்களின் ஒற்றுமையை இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக்காட்ட முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

* * *

### உயர் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம்

இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு பேச்சுக்கள் நடைபெறும் இக்கால கட்டத்தில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையோர் என்ற போர்வையில் அரசியல் கைதிகள் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டிருப்பது பாரிய மனித உரிமை மீறலாகும்.

இன்றைய சூழ்நிலையில் கைதிகளின் போராட்டம் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அவர்களுக்கு நியாயமான தீர்வினைப் பெற்று, அவர்களை உடனடியாக விடுதலை செய்வது பொருத்தமான ஒன்றாகும்.

தொடர்ந்தும் இக் கைதிகள் உண்ணாவிரதம் இருப்பார்களாயின் பல உயிர் இழப்புக்களை சந்திக்க நேரிடும். இன்று அவர்கள் இரத்த வாந்தியிலும், மயக்க நிலையிலும் இருப்பதால் உடனடியாகப் போராட்டத்தினை நிறுத்தி, எவ்விதமான நிபந்தனைகளும் இன்றி தமிழ் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு மாணவ ஒன்றியமானது வலியுறுத்துகின்றது.

* * *

### யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்

களுத்துறை, வெலிக்கடை, மட்டக்களப்பு, மகசீன் சிறைகளில் உண்ணாவிரதம் இருந்து தங்கள் உயிர்களை விடத் துணிந்துள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக அரசு விடுதலை செய்து அவர்களின இன்னுயிர்களைக் காப்பாற்ற வேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடவடிக்கைகள் நடைமுறைக்கு வந்து இரு நூறு நாள்களையும் தாண்டிய நிலையிலும் -

விடுதலைப் புலிகள் - அரசு கைதிகள் பரிமாற்றம் நடைபெற்று இரு வாரங்களைத் தாண்டுகின்ற நிலையிலும் - இன்னமும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாதிருப்பதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அவர்களின் நியாயமான கோரிக்கையை, சமாதான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அரசு மதித்து அவர்களை விடுவித்து அவர்களின் உயிர்கள்ளைக் காப்பாற்ற வேண்டும்.

* * *

### யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானத்திற்காக ஸ்ரீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு இயல்புநிலை தோற்றுவிக்கப்பட்டுக் கைதிகள் பரிமாற்றமும் செய்யப்பட்டு வரும் நேரத்தில் எதுவித குற்றச்சாட்டுகளும் சுமத்த முடியாத நிலையில் நீண்டகாலம் சிறையில் அடைக்கப்பட்டு வாடும் தமிழ் அரசியற் கைதிகளின் உண்ணாவிரதத்தின் தூய்மை உணர்ந்து சகல தமிழ் மக்களும் அவர்களின் விடுதலையை வேண்டி அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டியது எமது முற்று முழுதான கடமையாகும்.

தற்பொழுது களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் -

மிகவும் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டதனால் விரக்தியின் எல்லையில் இருக்கும் அவர்களை மனிதாபிமான அடிப்படையில் உடன் விடுதலை செய்து, அவர்கள் ஒரு சீரான வாழ்க்கையை நடத்த அரசாங்கம் உதவவேண்டும் எனவும் -

அரசாங்கம் தமிழ் அரசியற் கைதிகளின் அஹிம்சைவழிப் போராட்டத்தை உதாசீனம் செய்வதை யாழ்.வணிகர் கழகம் வன்மையாகக் கண்டிப்பதுடன் நாமும் இங்கு அஹிம்சைப் போராட்டங்களில் ஈடுபட வேண்டிவரும் எனவும் - வேதனையுடன் தெரியப்படுத்துகின்றோம்.

* * *

### கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

மிக நீண்ட காலமாக ஸ்ரீலங்கா அரசின் பல்வேறு சிறைச்சாலைகளில் விசாரணைகள் எதுவுமின்றியும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த எட்டு நாள்களாக சாகும் வரை உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

இந்த தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் எமது மண்ணின் விடுதலைக்காக தமது பங்களிப்பின் காரணமாகவே சிறையில் வாடுகின்றனர் என்பதால் அவர்களது உடனடி விடுதலைக்காகக் குரல் கொடுப்பது தமிழ் மக்களாகிய எம் எல்லோரதும் கடமையாகும்.

இதன் பொருட்டு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் இன்று ஏற்பாடு செய்துள்ள போராட்ட நடவடிக்கைகளில் கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களும் ஏனைய துறை சார்ந்தவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என வேண்டிக் கொள்கின்றோம்.

* * *

### தமிழர் ஆசிரியர் சங்கம்

களுத்துறைச் சிறைச்சாலையில் நீராகாரம் இன்றி தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யும்படி கோரி யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களினால் இன்று நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரை நடத்தப்படும் அமைதிப் போராட்டத்தில் யாழ். மாவட்ட சகல பாடசாலைகளையும், வலயக் கல்வித் திணைக்களங்களையும் ஆதரவு வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சி.து. பொ. செயலாளர் த.பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆசிரியர்கள் அதிபரின் தலைமையில் பாடசாலைக்கு வெளியே வருகை தந்து சுலோக அட்டைகளை ஏந்தியபடியும், வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் வலயக் கல்வித் திணைக்களத்தினரும் போராட்டத்தில் ஈடுபடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

* * *

### தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை - யாழ். மாவட்டம்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும், அவசரகால சட்டத்தின் கீழும் காரணமின்றி கைது செய்யப்பட்டு எந்தவித விசாரணைகளும் இன்றி வருடக்கணக்காக சிறைக் கூடங்களில் வாடும் எமது உறவுகளின் விடுதலைக்காக கல்விச் சமூகத்தினராகிய நாமும் போராட்டத்தில் இறங்குகின்றோம்.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத்தடைச் சட்டம் இரண்டும் காலாவதியாகிய போதிலும் இவர்களின் சிறைக் கதவுகள் மட்டும் காரணம் எதுவுமின்றி தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக இறுகப் பூட்டி இருப்பது பெரும் விசனத்தைத் தருகிறது.

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னான இன்றைய அமைதியான சூழலிலும் இவர்களின் விடுதலை ஏன் மறுக்கப்படுகிறது என்கின்ற கேள்வியும் கல்விச் சமூகமாகிய எமக்கும் மக்களுக்கும் எழச் செய்கிறது.

இன்று வாழ்வா, சாவா என விடுதலை இன்றேல் தியாகச் சாவு என்ற முடிவோடு தம்மை உருக்கிக் கொண்டிருக்கும் உறவுகளுக்கு ஆதரவாக இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இடம்பெறுகின்ற மறியற்போராட்டத்தில் முழுமையாகப் பங்கேற்பதுடன் இவர்களின் விடுதலைக்காக ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்படாது விடின் தொடர்ந்தும் போராட கல்விச் சமூகத்தினராகிய நாம் தயாராகுவோம்.

* * *

### தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்றியம்

சமாதானத்துக்கான நகர்வுகள் மிகவும் நிதானமாகவும் நியாயமாகவும் சென்று கொண்டிருக்கும் வேளையில அரசியல் கைதிகளின் விடுதலையை அரசு உடன் செயற்படுத்த வேண்டும். இவ் விடுதலையானது சமாதானத்தின் ஓர் அத்தியாயமாகும். இச் சம்பவம் சமாதானத்துக்கான பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் நடைபெற வேண்டிய ஒரு விடயமாகும். இன்னும் காலம் தாழ்த்தாது அரசியல் கைதிகளாக இருக்கும் அனைவரையும் உடன் விடுதலை செய்து சமாதானத்துக்கான நல்லெண்ணத்தை அரசு வெளிப்படுத்தி தமிழ் மக்களின் அபிலாஷையைப் பூர்த்திசெய்ய வேண்டும். இவ்விவகாரம் பின் தள்ளப்படும் ஒவ்வொரு நிமிடமும் போராடித்தான் பெறவேண்டுமா? என்ற கேள்வியை தூண்டி நிற்கிறது. தமிழனின் வாழ்வு கேள்விக் குறியாக நிற்காது செயற்படுத்த இந்த அரசை வேண்டி நிற்கிறோம். கேள்விக் குறியாக எம்வாழ்வு நிற்குமேயானால் அதற்கான விடையையும் நாமே தீர்மானிக்க வேண்டிய நிலையை நீங்களே உருவாக்கும் ஒரு காரணியாக அமைந்துவிடும்.

* * *

### தீவக மக்கள் நலன் காப்பகம்

கடந்தகால யுத்த நடவடிக்கைகளைக் காரணங்காட்டி அவசரகாலச் சட்டம் என்னும் பெயரில் அப்பாவித் தமிழர்களையெல்லாம் கூண்டோடு சிறைக்குத் தள்ளும் அர்த்தமற்ற இனவாத நடவடிக்கைகளில் சிங்கள அரசும் அரசபடை சார்ந்தவர்களும் கண்மூடித்தனமாக தமது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தனர். அவ்வாறு கைதானவர்களில் பலர் இன்று எங்கே என்பதே தெரியாத நிலையில் எஞ்சியுள்ள - சிறைக்குள் வாடும் - அப்பாவித் தமிழர்களின்மீது அரசாங்கமோ, சட்டமோ பாராமுகமாக உள்ளமை கவலைக்கிடமான விடயம்.

சமாதானம் மலரும் இவ்வேளையில் இன்னமும் தமிழ் கைதிகளை சிறைகளில் அடைத்து வைத்திருப்பது ஓர் அர்த்தமற்ற செயலாகும். இப்படியான நடவடிக்கைகளால் சிறகொடிந்து போன குடும்பங்கள், மங்கையர் கணக்கிலடங்காதவர்களே. எதிர்காலம் பாழாகிப்போன இளைஞர், யுவதிகள் எத்தனை? இவர்களுக்கு இன்றைய அரசு என்ன பதில் கூறப்போகிறது.

சட்டதிட்டங்கள் பற்றி ஆராய இது வல்ல காலம் எத்தனை வருடங்களாக சிறையில் வாடியபோது மௌனம் சாதித்த சட்டம் இன்று அவர்களின் விடுதலைக்கு உண்ணா நோன்பிருந்து சாவின் எல்லையில் நிற்கும்போது முட்டுக்கட்டை போடுவதால் எந்தப் பயனும் இல்லை. அப்பாவித் தமிழ்க் கைதிகளின் உயிரோடு விளையாடுவதற்கு ஒரு எல்லையுண்டு.

அவர்களுக்கு இன்றுவரை ஒரு தீர்ப்புக்கூட வழங்காது சிறையில் அடைத்து வைத்துவிட்டு இன்று சட்டம் ஒன்றைக் காரணங்காட்டி அவர்கள் உயிரைப் போக்குவதில் நியாயமில்லை. அவர்களின் உயிரிற்கு ஒன்றானால் இன்றைய அரசும் சட்டமும் என்ன பதில் சொல்லும் என்பதே கேள்வி?

உடனடியாக எந்தவித பாரபட்சமுமின்றித் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். மாறாக அரசின் பாராமுகம் தமிழ்க் கைதிகளின் உயிருக்கு ஆபத்து நேருமெனில் அது வரலாற்றில் அழிக்கமுடியாத வடுவாகும் என்பதோடு முழுத் தமிழினத்தின அபிலாஷைகளிற்கும் தூக்குக் கயிறு இட்டதாகவே அமையும்.

எனவே, அரசு உடனடியாக அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்பதை ஆணித்தரமாக தீவக மக்கள் நலன் காப்பகம் தீவக மக்கள் சார்பில் வேண்டிக் கொள்கிறது. அத்துடன் தமிழ்க் கைதிகளின் விடுதலையை முன்னெடுத்து நடத்தப்படும் போராட்டத்திற்கு தீவக மக்கள் நலன் காப்பகம் முழு ஆதரவையும், பங்களிப்பையும் வழங்கும்.

(ம-ரி-3-17)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 2 மணிமுதல் அரியாலை கனகரட்ணம் மத்திய ம.வி. மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

★ புனித ஜோசப் வித்தியாலயம் எதிர் புனித சாள்ஸ் ம.வி.

**16 வயதுப் பிரிவு**

★ புனித ஜேம்ஸ் ம.வி. எதிர் வைத்தீஸ்வராக் கல்லூரி.

★ புனித ஜோசப் வித்தியாலயம் எதிர் யாழ்.மத்திய கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

★ புனித ஜேம்ஸ் ம.வி. எதிர் யாழ்.மத்திய கல்லூரி.

★ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் எதிர் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம். (ம-5-86)

★ ★ ★

தீவக கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30மணிமுதல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள 14வயதுப் பிரவினர்களுக்கான ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் எதிர் நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தியாலயம்.

★ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.

★ காரைநகர் கலாநிதி ஆதியாகராசா மத்திய ம.வி. எதிர் புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயம்.

★ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி எதிர் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய ம.வி.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகளுக்கிடையேயான கால் இறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்களும் இன்று நடைபெறவுள்ளன.

(ம-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப. 4மணிமுதல் பாஷையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பி.ப. 4மணி - சென்.ஹேரீஸ் வி.க "பி" அணி எதிர் நெற்றப்பதி வி.க "பி" அணி.

★ பிற்பகல் 5மணி - பாடுமீன் வி.க "ஏ" அணி எதிர் நெற்றப்பதி வி.க "ஏ" அணி. (ம-5)

★ ★ ★

வலிகாமம் கல்விவலய கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

**ஹென்றியரசர் கல்லூரியில்**

காலை 8.30மணி - 16வயதுப் பிரிவு - கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.

பிற்பகல் 2.30மணி - 18வயதுப் பிரிவு - வசாவிளான் மத்திய ம.வி. எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**ஸ்கந்தாவில்**

காலை 8.30மணி - 16வயதுப் பிரிவு - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோ.க.த.க.பாடசாலை.

★ அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

பிற்பகல் 2.30மணி - 18வயதுப் பிரிவு - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம். (ம-5-86)

## சேஷ்டை புரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றுக்குள் இரவு 11 மணியளவில் சிப்பாய் ஒருவர் புகுந்துள்ளார்.

அங்கு நித்திரையில் இருந்த பெண்களிடம் அவர் சேஷ்டை புரிய முயன்ற சமயம் விழித்துக் கொண்ட பெண்கள் கூக்குரல் இடவே அயலவர்கள் ஓடிச்சென்று சிப்பாயை மடக்கிப் பிடித்துள்ளனர்.

அதன்பின் அங்குவந்த வேறு சில சிப்பாய்கள் பிரஸ்தாப நபரை தம்மிடம் ஒப்படைக்கும்படி கோரினர். பொதுமக்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். கண்காணிப்புக் குழுவிடமே அவரை ஒப்படைக்கப் போவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அதிகாலை 5 மணிக்கு அங்கு வந்த உயர் இராணுவ அதிகாரி பிரஸ்தாப நபரைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி கோரினார். பொதுமக்கள் மறுப்புத் தெரிவிக்கவே சுடப்போவதாக அவர் பொதுமக்களை எச்சரித்தார்.

அதன்பின் அவரிடம் பொதுமக்கள் சிப்பாயை ஒப்படைத்தனர். அந்த நபரைக் கைவிலங்கிட்டு அந்த அதிகாரி அழைத்துச் சென்றார்.

நேற்றுக்காலை சம்பவ இடத்துக்கு வந்த கண்காணிப்புக் குழு அதிகாரிகள் பொதுமக்களை விசாரித்து அவர்களின் வாக்கு மூலங்களை பதிவு செய்தனர். (ம-3)

# அபிவிருத்தித் தொண்டர்களுக்கான தொழிற்பயிற்சி இறுதிப் பரீட்சை!

தென்மராட்சி,ஒக்.9

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட அபிவிருத்தி தொண்டர்களுக்கான தொழிற்பயிற்சியில் கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட இறுதி மதிப்பீட்டுப் பரீட்சையின்போது கடல் தொழில்நுட்ப பாடத்திற்கு தோற்றிய பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏழு பரீட்சார்த்திகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு சாவகச்சேரியில் உள்ள பிரதேச செயலகத்திற்கு வருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

பரீட்சையின்போது பாடத்திட்டத்திற்குரிய வினாத்தாள்களுக்குப் பதிலாக வேறு வினாத்தாள் அனுப்பப்பட்டதால் மேற்படி பரீட்சையை மீள நடத்துமாறு இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை அறிவித்துள்ளது. மீள் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் பின்வரும் பரீட்சார்த்திகள் பிரதேச செயலகத்துக்கு தவறாது குறிப்பிட்ட தினத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

தர்மலிங்கம் ஜெயசித்திரா (கிளாலி), மரியாம்பிள்ளை கமலினி (இந்திராபுரம், முகமாலை), இராமு மயூரன்(கிளாலி), சண்முகம் சசிதரன் (முகமாலை வடக்கு), ஆனந்தராசா இந்திராதேவி (வண்ணான்கேணி, பளை), பேதுருப்பிள்ளை மரியநாயகம் (புலோப்பளை கிழக்கு), பாலசிங்கம் ரதிகரன் (புலோப்பளை கிழக்கு).

(ஒ-117-31)

# கந்தளாயில் கைதான 2 புலிகளுக்கும் நீதிமன்றம் நேற்றுப் பிணை அனுமதி

## புலிகளின் காவலில் உள்ள பேடையினரையும் விடுவிக்க வாய்ப்பு

கொழும்பு,ஒக்.9

திருகோணமலை, கந்தளாயில் வைத்துக் கடந்த மாதம் படையினரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவரையும் பிணையில் விடுவிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

இதனால், விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள ஆறு படையினரையும் விடுவிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கந்தளாய் காட்டுப் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களான கந்தசாமி இராமசாமி, மாதவன் வசந்தன் ஆகிய இருவரும் படையினரால் கைது செய்யப்பட்டனர். பொலீஸாரால் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் கடந்த 27ஆம் திகதி திருகோணமலை வில்கம் விகாரைப் பகுதியில் ஏழு இராணுவத்தினரைப் புலிகள் கைது செய்தனர்.

அவர்களில் ஒருவர் பின்னர் மனிதாபிமான அடிப்படையில் புலிகளால் விடுவிக்கப்பட்டார்.

படையினரால் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டால் மட்டுமே எஞ்சிய இராணுவத்தினர் ஆறுபேரும் விடுவிக்கப்படுவர் எனப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், புலிகள் உறுப்பினர்கள் இருவரையும் பிணையில் விடக்கோரும் மனுக்கள் நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ, ஜி.டபிள்யூ. எதுசூரிய ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அரசுத் தரப்பு ஆட்சேபம் தெரிவிக்காததால் சம்பந்தப்பட்ட புலிகள் இருவருக்கும் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.

மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமைகளில் கந்தளாய் பொலீஸ் நிலையத்தில் ஆஜராகிக் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் தலா இருபத்தியையாயிரம் ரூபா காசுப் பிணையில் அவர்கள் இருவரும் செல்வதற்கு நீதியரசர்கள் அனுமதி வழங்கினர். (ஒ)

# எதிர்க்கட்சிகள் பேரணி; போக்குவரத்து ஸ்தம்பிதம்

கொழும்பு,ஒக்.9

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு எதிரே நேற்றுப் பிற்பகல் எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி கோட்டை 'ரெலிக்கொம்' பரிவர்த்தனை நிலையம் முன்பாக ஆரம்பித்து கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

ஆர்ப்பாட்டத்தால் மூன்று மணிநேரம் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன. வீதியில் இறங்கிய ஆயிரக்கணக்கானவர்கள் வாகனங்களைப் போகவிடாது தடுத்தனர். மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் கலைந்து சென்றனர்.

இப்பேரணியில் விமல் வீரவன்ச, திலக் கருணாரத்ன, ராஜா கொலுரே, சரத் அமுனுகம, தினேஷ் குணவர்த்தன, அநுரா பண்டாரநாயக்க, ரெஜி ரணதுங்க, அலவி மௌலானா, மங்கள சமரவீர ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ)

# தங்கும் விடுதிகளில் அனுமதியின்றி மதுபானம் விற்றால் நடவடிக்கை

## பொறுப்பதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் உள்ள தங்கும் விடுதிகள் சிலவற்றில் அனுமதி பெறாது மதுபானம் விற்பனை செய்யப்படுவதாகவும் -

அத்தகைய விடுதிகளின் உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

எச்சரிக்கை விடுத்துள்ளார் யாழ். மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என்.சோதிநாதன்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலான தென்பகுதி மக்கள் குடாநாட்டிற்கு வருகின்றனர் இதனை சாதகமாகப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கும் நோக்குடன் பல விடுதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு புதிதாக உருவாகும் விடுதிகளின் உரிமையாளர்கள் வியாபார நோக்கோடு விடுதிகளில் சட்டவிரோதமான முறையில் மதுபான வியாபாரம் உட்பட சில சலுகைகளைச் செய்துவருகின்றனர்.

இதனால் விடுதிகளில் தங்கியிருப்போர் மதுபோதையில் கூச்சல் கும்மாளங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் அந்த விடுதிகளுக்கண்மையில் அமைந்துள்ள வீடுகளில் இருப்போர் இடையூறுகளை எதிர்கொள்வதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

தங்கும் விடுதிகளை நடத்துவோர் தமது விடுதிகளில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடவேண்டாம் எனவும் -

விடுதிகளுக்குத் தங்க வருவோரை மதுபானத்துடன் விடுதிக்குள் அனுமதிக்கவேண்டாம் என்றும் - இவற்றை மீறி செயற்படும் விடுதி உரிமையாளர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படுவர் என்றும் அவர் உறுதிபடக் கூறினார். (ஒ-5)



தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து விரிவுரைகளைப் பகிஷ்கரித்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலை முன்றிலில் குழுமி நிற்பதையும், வெறிச்சோடிய விரிவுரை மண்டபங்களில் ஒன்றையும் படங்களில் காணலாம். (படங்கள் : வசந்தன்)

# மனித உரிமைகள் தொடர்பாக மாணவரிடையே விழிப்புணர்வு

## ஏற்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்.குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இதற்கென சட்டத்துறை சார்ந்தவர்களிடமிருந்து ஆலோசனைகள் பெறப்படவுள்ளன.

- இவ்வாறு யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதிபதிகளுடன் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட சட்ட ஆலோசகர் சேனக சமரசிங்க தெரிவித்துள்ளார். இச்சந்திப்பில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா ஆகியோர் பங்குபற்றினர்.

பாடசாலை மாணவர்களிடையே மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நடைபெறவுள்ள கருத்தரங்கிற்கு சட்டத்துறையினரின் உதவியும் தேவைப்படுவதால் அதனை சட்டத்துறையினர் வழங்கவேண்டும் என ஐ.நா.அபிவிருத்தித்திட்ட சட்ட ஆலோசகர் நீதிபதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை -

மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட ஆலோசகர் நீதிபதிகளிடம் தெரிவித்தார். (ஒ-8)

# 'பெப்ஸி ரின்' னுக்குள் மாட்டிய நாகபாம்பு இளைஞரால் மீட்பு!

வலி.வடக்கு,ஒக்.9

'பெப்ஸி' குளிர்பான 'ரின்'னுக்குள் தலையை நுழைத்து மாட்டிக்கொண்ட நாகபாம்பு ஒன்று இளைஞர்கள் சிலரின் முயற்சியால் காப்பாற்றப்பட்டது.

நேற்று நண்பகல் வண்ணார்பண்ணை கலட்டிச்சந்திக்கு அண்மையாகவுள்ள நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகில் உள்ள நீர் வற்றிய குளமருகே இச்சம்பவம் இடம்பெற்றது.

நண்பகல் நேரம் குளத்தினுள் 'பெப்ஸிரின்'னுக்குள் தலையை நுழைத்த நாகபாம்பு ஒன்று தலையை வெளியே எடுக்க முடியாமல் அங்கும் இங்கும் முட்டி மோதியபடி ஓடித்திரிந்தது.

இதனைக் கண்ணுற்ற இளைஞர்கள் சிலர் பாம்பைத் தடியின் உதவியுடன் நிழலான இடத்திற்கு கொண்டு வந்து ரின்னின் முன்பகுதியை கத்தியால் வெட்டி பாம்பைக் காப்பாற்றிவிட்டனர்.

இதனைப் பல பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் திரண்டு நின்று வேடிக்கை பார்த்தனர்.(ஒ-86)

# தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவாக யாழ். பல்கலையில் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

தம்மை விடுதலை செய்யக்கோரி களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் மாணவர் பொது அறையில் கூடிய அனைத்துப் பீட மாணவர்களும் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து விரிவுரைகள் அனைத்தையும் பகிஷ்கரிப்பதென முடிவுசெய்தனர். -

மாணவர்கள் எவரும் விரிவுரைகளுக்கு வராத காரணத்தால் விரிவுரை மண்டபங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது உறவுகளை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசு ஓரிரு தினங்களுக்குள் மேற்கொள்ளவேண்டும் என்றும் -

தவறும் பட்சத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இயங்கும் அனைத்து அரச அலுவலகங்களையும் செயலிழக்கச் செய்யும் பாரிய போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் -

பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களால் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5-86)

# மருத்துவ நிலையங்கள் குறித்து தென்மராட்சி மக்கள் அதிருப்தி

தென்மராட்சி,ஒக்.9

தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களில் 75 சதவீதமான மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளபோதிலும் பிரதேசத்தில் உள்ள நான்கு மருத்துவ நிலையங்களில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் பகல் வேளையில், இயங்கிவருவது குறித்து பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, வரணி மத்திய மருந்தகம், கொடிகாமம் மத்திய மருந்தகம், கைதடி மத்திய மருந்தகம் ஆகிய நான்கு மருத்துவ நிலையங்களும் பகல் நேரங்களில் மட்டுமே இயங்கி வருகின்றன.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி தவிர்ந்த ஏனையவற்றில் வெளிநோயாளர் பிரிவுகள் வரணி மத்திய மருந்தகம் காலையிலும், கொடிகாமம் மத்திய மருந்தகம் பிற்பகலிலும், கைதடி மருந்தகம் ஒன்றுவிட்டு ஒருநாளும் இயங்குகின்றன.

கடந்த மாதம்வரை 15 ஆயிரத்து 857 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 340 பேர் மீளக்குடியமர்ந்துள்ளபோதிலும் இந்த நான்கு மருத்துவ நிலையங்களிலும் வார்ட்டுகளோ அல்லது பிரசவ விடுதிகளோ ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை சுகாதாரத் திணைக்களம் இதுவரை மேற்கொள்ளாததால் இப்பகுதி மக்கள் தமது வைத்திய தேவைக்காக யாழ்ப்பாணம் அல்லது மந்திகை போன்ற இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது.

ஆஸ்பத்திரி வார்ட்டுகளை திறக்கக்கோரி இப்பிரதேசத்தில் உள்ள பல பொதுஅமைப்புகள் கோரிக்கைகள் விடுத்தும் இதுவரை பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

# கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

வலி.கிழக்கு,ஒக்.9

உரும்பிராய் மேற்குப் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் அண்மையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்ற அழைப்பாணையினை வழங்கச் சென்ற பொலீஸாரும், அப்பகுதி கிராம உத்தியோகத்தரும் மீண்டும் அவ்விடத்தைவிட்டு திரும்பப் பல சிரமங்களை எதிர்கொண்டதாகக் கூறப்படுகிறது.

(ஒ-180)

# மன்னாரிலும் பெரும் பேரணி

மன்னார்,ஒக்.9

சிறைகளில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் சிறைக்கைதிகளின் விடுதலைக்காகவும் நேற்றுக் காலை மன்னாரில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இப்பேரணியில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச-அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

காலை 9 மணியளவில் மன்னார் பொது விளையாட்டரங்கில் ஒன்றுகூடிய இவர்கள், அங்கிருந்து 10.30 மணியளவில் பிரதான வீதியூடாக மன்னார் செயலகத்துக்கு ஊர்வலமாகச் சென்றனர். மும்மதத் தலைவர்களும் ஊர்வலத்தில் சென்றனர்.

'கைதிகளை விடுதலை செய்' என்று ஊர்வலத்தில் சென்றோர் கோஷங்களை எழுப்பினர். அவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

செயலகத்தை ஊர்வலம் சென்றடைந்ததும் மன்னார் மாவட்ட குரு முதல்வர் அருட்திரு சேவியர் குரூஸ், அரச அதிபர் வே.விஸ்வலிங்கத்திடம் பாதுகாப்பு அமைச்சருக்கான மகஜர் ஒன்றைக் கையளித்தார். மகஜரைக் கையேற்ற அரச அதிபர், அதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைப்பதாகத் தெரிவித்தார்.

இப்பேரணியை மன்னார் மாவட்ட தேசிய தமிழ் எழுச்சிப் பேரவையும், ப்ரஜைகள் குழுவும் வெகுஜன ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இப்பேரணி காரணமாக மன்னாரில் நேற்று அரச நிறுவனங்கள், பாடசாலைகள் செயற்படவில்லை. தனியார் நிறுவனங்களும் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. (ஒ)

முன்னுரிமை அடிப்படையில்

# நெடுந்தீவு தபாலகத்துக்கு தொலைபேசி இணைப்பு வழங்குக

## அமைச்சர் ஜயலத் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

நெடுந்தீவு பிரதம தபாலகத்துக்கு முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புனர்வாழ்வு, அகதிகள் மீளக்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா ஊடகத்துறை அமைச்சின் செயலாளரைக் கடிதம்மூலம் கேட்டுள்ளார்.

அமைச்சரின் சார்பில் அவரது செயலாளர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவுக்கு தரைவழிப் பாதை இல்லை. எனவே, மேற்படி பகுதியில வசிக்கும் பொதுமக்கள் உடனுக்குடன் வெளியிடங்களுடன் தொடர்புகொள்வதற்கு வசதியாக தபாலகத்துக்கு தொலைபேசி இணைப்பு அவசியமாகும்.

அத்துடன், தபால் சேவையினை விருத்திசெய்வதற்கும் தொலைபேசி இணைப்பு அவசியமாகும். எனவே, இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தின் பிரதிகள் அஞ்சல் அதிபர் ஆணையாளர், சிறிலங்கா ரெலிகொம் தலைவர், நெடுந்தீவு தபாலதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ)

## பதினைந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 - 07 - 1914

உதிர்வு 27 - 09 - 1987

### அமரர் ஆறுமுகம் வீரசிங்கம்

(எழுதுமட்டுவாழ்)

திதி: 09.10.2002

திருமுகம் கண்டு பதினைந்து ஆண்டுகள் மறைந்தனவே
உருகும் மனதுடன் உங்கள் நினைவில் வாடும்:

- குடும்பத்தினர்.

*விசுவர் வளவு, சரசாலை மத்தி, சாவகச்சேரி.*

(சீ-24032)

## பரிசளிப்பும் நவராத்திரி விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.9

[illegible] ...யப் பேரவையின் சைவச் சிறுவர் [illegible] ...லம் நடத்தும் பரிசளிப்பு விழாவும், நவராத்திரி விழாவும் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஏழாலையில் உள்ள சைவச்சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மாணவர் அரங்கு, இசை அரங்கு, நாட்டிய அரங்கு ஆகிய விசேட நிகழ்வுகள் இடம்பெறும். (எ)

## நியாப் திட்டம் குறித்த கலந்துரையாடல்

வலி.கிழக்கு,ஒக்.9

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இருபாலை தெற்கு செம்மணி குள நியாப் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட சகல அரச திணைக்கள உத்தியோகஸ்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஒ-180)

## பாலம் சேதம்; மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

கோப்பாய் - கைதடி பகுதிகளை இணைக்கும் பாலம் பலத்த சேதமடைந்து காணப்படுகிறது.

இதனால் மேற்படி பாலத்தினூடாகப் பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருவ மழை ஆரம்பித்திருப்பதையடுத்து, மேற்படி பாலத்தினூடாகப் பயணம் செய்யும் வாகனங்களும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை அனுபவிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

(எ-180)

## ஆட்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு கணனி இயக்குநர், தொலைபேசி இயக்குநர் (பெண்கள்) ஆகியோர் தேவை. யாழ்ப்பாணம், கொடிகாமம், பளை முதலிய இடங்களிலுள்ள எமது கிளை நிறுவனங்களில் பணிபுரிவதற்காக அனுபவமுள்ளவர்கள் மட்டும் சான்றிதழ்களுடன் நாளை (10.10.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழுள்ள முகவரிக்கு சமுகமளிக்கவும்.

நிர்வாகி

**அற்லஸ் கொமினிக்கேஷன்,**

**77, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(9210)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஆவரங்கால் நடராஜ வித்தியாலய மாணவன்

செல்வன்

### கந்தசாமி லோககாந்தன்



அவர்கள் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை - 2002இல் 137 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரைப் பாராட்டுவதுடன், இவரைக் கற்பித்து அறிவூட்டி வழிகாட்டிய பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், குகன் கல்வி நிறுவன (ஆவரங்கால்) இயக்குநர், ஆசிரியர்களுக்கும் ஆசிரியை செல்வி லாவண்யா அவர்களுக்கும் நன்றிகள் கூறி வாழ்த்தி எமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றோம்.

அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணா, தங்கை, உறவினர்கள்,
ராசுமாமா - சுவிஸ்
பேரின்பமாமா - ஜேர்மனி
குஞ்சு சித்தி - ஹொலண்ட்

*'இராஜேஸ்ரோன்', மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.* (9123)

## கண்ணீர்க் காணிக்கையும் துயர் பகிர்தலும்

எமது கலாசாலையின் 2ஆம் வருட நடனநெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி செல்வி க.மதி அவர்களின் அன்புத் தந்தையார்

### வேல்முருகு கனகரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்கு எமது கண்ணீர்க்காணிக்கையைச் சமர்ப்பித்து, துயரில் நாமும் பங்கேற்று, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகத்தினர்

(9198)


# சுடர் ஒளி

விலை 14/-

08-10-2002 இதழில்

* ரணிலை ஓங்கட்ட ஜனாதிபதி வியூகம்
* சாதனை படைத்து, வரலாறான தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்
* தமிழக, கர்நாடக தினை உலகை கலக்கும் காவிரிப் பிரச்சினை
* திருமலை கைதிகள் விவகாரம்
* வவுனியாவில் அதிகரிக்கும் சிசுக் கொலைகள்
* பொலிஸ் உயர் பதவிக்கு மீண்டும் ஒரு தமிழர்
* இராமர் மீட்டதால் சீதைக்குப் பெருமை
  நம்மவர் தகர்த்தால் நமக்குப் பெருமை (தொடர்)
* அலைகளின் காவியம் (மக்கள் துயரம்)
* மட்டக்களப்பில் வன்முறையில் முடிவடைந்த வீதிமறியல் போராட்டம்
* மற்றும் மசாலா மிக்ஸ், சித்திரத் தொடர்கதை, இணையத் தளங்களிலிருந்து, சினிமா, பித்தன் பதில்கள், ஆந்தையாரின் க்ராம் டயரி, விளையாட்டு உட்பட பல சுவையான அம்சங்கள்.




வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்கவைக்கும் ஒரே ஒரு பத்திரிகை!

உதயன்

## ஜனாதிபதிக்குத் தெரியாமல் நடந்த விடயங்கள்!

"ஊர்காவற்றுறையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துங்கள். சந்தேகநபர்களை இரண்டு நாள்களுக்குள் கைதுசெய்யுங்கள்!"

- இவ்வாறு இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கும் பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜாவுக்கும் உத்தரவிட்டிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டமை குறித்து இரண்டு நாள்களுக்குள் எழுத்துமூலம் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் பொலீஸ்மா அதிபரைப் பணித்திருக்கின்றார் அவர்.

"ஜனநாயக ஆட்சிமுறையின்கீழ் யாரும் இப்படி சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுப்பதற்கு அனுமதிக்கக் கூடாது" என்றும் உறுதிபடக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி.

வடக்கில், நாட்டின் ஓர் எல்லையில் இடம்பெற்ற ஒரு சம்பவம் குறித்து இவ்வளவு சிரத்தை எடுத்து, நடவடிக்கை எடுக்கப் பணித்திருக்கின்றார் அவர்.

1994முதல் 2001வரை ஏழு ஆண்டு காலம் அவரது கட்சிதான் ஆட்சியில் இருந்தது. அந்தக் காலத்திலும் வடக்கில் உள்ள ஜனநாயகக் கட்சிகளின் பாதுகாப்பு விவகாரத்தில் இதே கவனத்தை - ஜனநாயகத்தைப் பேணுவதில் தனக்குள்ள இதே கரிசனையை - அவர் காட்டியிருப்பாரேயானால், இப்போதும் அவர் காட்டும் சிரத்தைக்காக அவரைப் பாராட்டலாம்; வரவேற்கலாம்.

ஆனால், அவர் அப்படி நடக்கவில்லையே! அவரது கடந்தகால செயற்பாடுகள் அப்படி அமையவில்லையே! - அதுதான் வேதனை.

போர்வழியைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிய ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் தலையாய பொறுப்பு என்று இன்று சுட்டிக்காட்டும் ஜனாதிபதி, இது விடயத்தில் கடந்தகால சரித்திரத்தை மறந்துவிட்டமை வருத்தத்துக்குரியது.

இந்திய அமைதிப் படையின் இலங்கை வருகைக்குப் பின்னர், போர்வழியைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டோம் என்ற வெளிவேஷத்தோடு - ஒரு டசினுக்குக் குறைவான உறுப்பினர்கள் சகிதம் - ஈ.பி.டி.பி. பிரமுகர் டக்ளஸ் தேவானந்தா இந்தியாவிலிருந்து கொழும்புக்குத் திரும்பினார். அவர்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ தம்முடைய சில தேவைகளுக்காக ஆதரவுக்கரம் நீட்டினார்.

அப்போது கொழும்பில் வெள்ளை வானில் வருவோர், கொழும்பில் வசித்த தமிழர்களுக்கு - குறிப்பாக இளைஞர், யுவதிகளுக்கு - எதிராகப் புரிந்த அட்டூழியங்கள், கொடூரங்கள், சித்திரவதைகள் ஆகியவை இலகுவில் மறந்துவிடக் கூடியவை அல்ல.

அவற்றை, இப்போது ஜனாதிபதியாக இருக்கும் ஜனாதிபதி குமாரதுங்கவே, அப்போது கடுமையாக விமர்சித்தார். 'தனது தனிப்பட்ட ஆயுதக் குழுவாக இயங்கும் ஈ.பி.டி.பி. மூலம் என்னைக் கொல்வதற்கு ஜனாதிபதி பிரேமதாஸ முயற்சிக்கின்றார்' என்று இதே சந்திரிகா குமாரதுங்கவே குற்றஞ்சாட்டியதும் மறந்துவிடக்கூடியது அல்ல.

1994 பொதுத் தேர்தல் யாழ்-குடாநாட்டில் தீவகத்தில் மட்டும்தான் நடந்தது.

கொழும்பிலிருந்து தீவகத்துக்கு பிரசாரத்துக்குச் சென்ற தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள், அங்கு ஆயுதமுனையில் கட்டுப்பாட்டை வைத்திருந்த - இப்போது போன்ற 'ஜனநாயக வழிக்குத் திரும்பியதாக' கூறிக்கொண்ட - கட்சியினரால், எப்படி நடத்தப்பட்டார்கள், ஜனநாயகப் பிரசாரத்துக்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டார்கள் என்பவை பரமரகசியம். அதை அறிந்தவர்கள் இப்போது நெடுந்தீவில் நடந்தது ஒன்றும் பெரிய விடயமல்ல என்று புறந்தள்ளுவார்கள் என்பது நிச்சயம்.

நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியவர்கள். புலிகளிடமிருந்து நம்மையும் நமது மக்களையும் காப்பதற்காக - சுய பாதுகாப்புக்காக மட்டுமே ஆயுதங்களை வைத்திருக்கின்றோம் என்று கூறிக்கொண்டு யாழ்.தீவகத்தை தங்கள் கைப்பிடிக்குள் சுமார் ஒரு தசாப்த காலம் இவர்கள் எப்படி வைத்திருந்தார்கள் என்பதை ஜனாதிபதி மறந்திருக்கலாம்.

தீவகச் சிறையில் தமிழர்கள் அடிமைகளாக வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற உண்மையை தமிழ்க் கட்சிகள் பலமட்டங்களிலும் அம்பலப்படுத்தியபோது அது ஜனாதிபதிக்குப் புரியாமல் இருந்திருக்கலாம்.

என்றுமே ஆயுதங்களை நாடாத தமிழர் கூட்டணி வேட்பாளர்கள் ஜனநாயகத் தேர்தலின் பிரசாரத்துக்காக தீவுப் பகுதிக்குச் சென்றபோது 'ஏ.கே.-47' போன்ற ஆயுதங்களை வைத்திருந்த கும்பலால் அடித்து, வெட்டி, சுட்டுக்கொன்று கொடூர மிருகத்தனம் புரியப்பட்டதும் ஜனாதிபதிக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்.

பொதுமக்கள்தான் தமிழர் கூட்டணிப் பிரமுகர்களை அடித்து, வெட்டி, சுட்டுக்கொன்றனர் என்று அப்போது கூறப்பட்ட 'அரிச்சந்திர புராணத்தை' ஜனாதிபதி நம்பியிருந்திருக்கவும் கூடும்.

அப்படி இவையெல்லாம் ஜனாதிபதிக்குத் தெரியாமல் - அல்லது புரியாமல் - அல்லது அவர் அறியாமல் - இருந்திருக்கவேண்டும்.

இப்போது நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி காட்டும் சிரத்தை, அவர் கூறும் தத்துவங்கள் போன்றவை அத்தகைய எண்ணத்தைத்தான் எவருக்கும் ஏற்படுத்தும்.

---

தொழில் திணைக்களத்தில்

# வேலையற்ற இளைஞர், யுவதிகள் பதிவுகளை மேற்கொள்ளலாம்

## யாழ்.அலுவலக அதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கும்வகை தொழில் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தில் அவர்களது விவரங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்கள அதிகாரி அறிவித்துள்ளார்.

பதிவுசெய்வதற்கு உரிய படிவங்கள் கொழும்பிலிருந்து வந்து சேராமையால் தாமதமான இந்தப் பணிகள், தற்போது படிவங்கள் எடுத்துவரப்பட்டிப்பதைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.வீரசிங்கம் கட்டடத்தில் இயங்கும் தொழில் திணைக்கள மனிதவள ஸ்தாபன சேவைப் பிரிவில் பிரதி திங்கள்,புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 10 மணிமுதல் பிற்பகல் 1மணிவரை இப்பதிவுகளை மேற்கொள்ளமுடியும் எனவும் -

பதிவுசெய்துகொள்ள விரும்பும் வேலையற்ற இளைஞர், யுவதிகள் தமது தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் வேலை அனுபவச் சான்றிதழ்கள் இருப்பின அவற்றையும் எடுத்துவந்து உரிய படிவத்தைப் பெற்றுப் பூர்த்திசெய்து பதிவினை மேற்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவுசெய்பவர்களின் பெயர்கள் பின்னர் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் வெற்றிடங்களுக்கான நியமனங்களின்போது தொழில் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

---

# முதற்சுற்றுப் பேச்சின் முடிவில் விடுதலைப் புலிகளுக்கே வெற்றி!

## பிரபல அரசியல் ஆய்வாளர் கருத்து

கொழும்பு,ஒக்.9

தாய்லாந்தில் இடம்பெற்ற முதற்சுற்றுப் பேச்சினால் விடுதலைப் புலிகளே அதிக வெற்றியைப் பெற்றுள்ளனர்.

- இவ்வாறு பிரபல இந்திய அரசியல் ஆய்வாளர் வீ.சூரிய நாராயன் குறிப்பிட்டுள்ளார். 'புரண்ட்லைன்' சஞ்சிகையில் எழுதியுள்ள கட்டுரையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்டுரையில் இது தொடர்பாக மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

சமாதான முயற்சிகளின் முதல் கட்டத்தின்போது விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கப்பட்டது. விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். இடைக்கால நிர்வாகத்தின் ஊடாக பாரிய பொறுப்புக்கள் விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படவுள்ளன. இதனால், உலகெங்கும் விடுதலைப் புலிகள் தங்களுக்குச் சாதகமான பிரசாரங்களை மேற்கொள்ள வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. இதன் மூலம் உலகில் முக்கிய நாடுகளில் தமது அமைப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை விடுதலைப் புலிகள் நீக்க முயற்சிப்பர் - என்றுள்ளது. (ஓ)

---

## நெடுந்தீவு தாக்குதல் சம்பவம்:

# ஈ.பி.டி.பியின் அறிக்கை உண்மைக்குப் புறம்பானது

## நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.9

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. அலுவலகம் தாக்கப்பட்டதில் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பிருப்பதாக ஈ.பி.டி.பி. வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பது உண்மைக்குப் புறம்பானது.

- இவ்வாறு நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த சனிக்கிழமை இரவு நெடுந்தீவில் உள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மதுபோதையில் வீதியால் வந்த நபர் ஒருவருடன் வாய்த்தகராறில் ஈடுபட்டனர். அந்தத் தகராறு முற்றி கைகலப்பு ஏற்பட்டது. ஈ.பி.டி.பியினர் அந்த நபரை தாறுமாறாகத் தாக்கினர். அடிவாங்கிய நபர் அவலக்குரல் எழுப்பிக்கொண்டு கிழக்கு நோக்கி ஓடினார். அவரை ஈ.பி.டி.பியினர் விரட்டிச் சென்றனர். அப்பகுதியில் தேநீர்க்கடை வைத்திருக்கும் தில்லைநாதன் என்பவர் வழிமறித்து கேட்டார். அவரை ஈ.பி.டி.பியினர் சரமாரியாக வெட்டினார்கள். அவரின் அவலக்குரல் கேட்டு அயல்பொதுமக்கள் அங்கு திரண்டனர். ஈ.பி.டி.பியினரைத் தடுத்த அவர்கள் ஒன்று திரண்டு அவர்களை விரட்டிச் சென்று ஈ.பி.டி.பி. முகாமைக் கொளுத்தியதுடன் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரையும் பிடித்தனர். அத்துடன், கிரனேட் குண்டுகள், ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டு கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஈ.பி.டி.பியினரின் சேஷ்டைக்கு இலக்கான நபர் 2000ஆம் ஆண்டு ஈ.பி.டி.பியினரால் நடுநிசியில் கடுமையாகத் தாக்கப்பட்டவர் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. மேற்படி சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. புலிகள்மீது வீணாக சேறுபூசப் பார்க்கிறார்கள். இவர்களின் பொய்வார்த்தைகளை இனிமேலும் மக்கள் நம்பத்தயாரில்லை. பொதுமக்களால் பிடிக்கப்பட்ட அமீன் என்பவர் பேசியதை மக்கள் ஒலிநாடவில் பதிவுசெய்து வைத்துள்ளனர்.

தன்னை ஈ.பி.டி.பியினரிடம் ஒப்படைக்கவேண்டாம் எனவும் - கண்காணிப்புக் குழுமூலம் தனது பெற்றோரிடம் அனுப்பி வைக்குமாறும் - கேட்டுக்கொண்டார் என்பதனையும் தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது. (ஓ)

---

## தனியார்மயமாக்கலைக் கண்டித்து

# யாழ்.செயலகம் முன்பாக நேற்று அடையாள மறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.9

அரசின் தனியார்மயமாக்கலை எதிர்த்து ஐக்கிய சோஷலிசக் கட்சியினர் நேற்று, யாழ்.செயலகம் முன்பாக அடையாள மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் அரை மணிநேரம் இடம்பெற்ற இந்த அடையாள மறியற்போராட்டம் காரணமாக செயலக ஊழியர்கள் தமது பணிகளுக்குச் செல்ல தடங்கல் ஏற்பட்டது.

நேற்றுக்காலை அப்பகுதிக்கு வந்த கட்சியின் உறுப்பினர்கள் சுமார் 15 பேர் செயலக பிரதான வாயிலின் முன்பாக 8.30 மணி தொடக்கம் 9 மணிவரையும் மறியலில் ஈடுபட்டனர்.

போராட்டம் ஆரம்பமான அரை மணி நேரத்தின் பின்னர் அதாவது காலை 9 மணியளவில் போராட்டம் நிறுத்தப்பட்டது. அதனையடுத்து செயலக ஊழியர்கள் பணிக்குச் சென்றதால் செயலகம் வழமைபோல் இயங்கியது. (ஒ-10)

---

**நாளை**

புரட்டாதி 24
வியாழக்கிழமை
(10.10.2002)
திதி : சதுர்த்தி
முற்பகல் 8.49 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
முன்னிரவு 7.42 வரை.
சுபநேரம் : 7.32 - 9.02
ராகுகாலம்: 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உங்களால் புரிந்துகொள்ள முடியாத விடயங்களில் குறை காண வேண்டாம்.

---

# வத்தளையில் கடத்தப்பட்ட வான் புலிகளினால் மீட்டு ஒப்படைப்பு!

வத்தளையில் கடந்த மாதம் கடத்தப்பட்ட டொல்பின் வானை விடுதலைப் புலிகள் மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வெள்ளவத்தை ஹம்டன் வீதியைச் சேர்ந்த கனகரத்தினம் தேவானந்தன் என்பவரின் வானே கடத்தப்பட்டிருந்தது.

புத்தளத்துக்கு செல்வதற்காக வாடகைக்கு அமர்த்திய நபர்கள் அங்கு சென்று திரும்பும் வழியில் சாரதியான அந்த வானின் உரிமையாளர் தேவானந்தனை மயக்கமருந்து கொடுத்து மயக்கியதாகவும் -

அதன்பின்னர், அவரிடமிருந்த பொருள்களை அபகரித்துக்கொண்டு அவரை வீதியோரம் போட்டுவிட்டு வானைக் கடத்திச் சென்றதாகவும் - கூறப்பட்டது.

253 - 0465 இலக்கத்தை உடைய அந்த வானை கடந்த சனிக்கிழமை மீட்ட விடுதலைப் புலிகள் அதனை உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர். (மு-3)

---

# ஜப்பானிய தூதரகக் குழு இன்று யாழ்.வருகிறது

யாழ்ப்பாணத்துக்கான மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கான ஜப்பானிய தூதரக அதிகாரிகள் குழுவொன்று இன்று இங்கு வருகைதரவுள்ளது.

இன்று வரும் இக்குழுவினர் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணியளவில் தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு முகாமுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடவுள்ளனர்.

நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாநகரசபை அலுவலகத்துக்குச் செல்லும் அவர்கள் யாழ்.மாவட்டத்தின் நிர்வாக நடைமுறைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து பொதுநூலகத்துக்கும் நயினாதீவுக்கும் செல்லவுள்ளனர்.

பிற்பகல் 2 மணியளவில் குருநகரில் உள்ள "சீநோர்" வலை உற்பத்தி தொழிற்சாலைக்கும் 3 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் செல்லவுள்ளனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்குச் செல்லவுள்ள குழுவினர் அன்று மாலை கொழும்பு திரும்பவுள்ளனர். (ஓ-10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய மாணவனும் தற்போது யா/வரணி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவனுமாகிய

**செல்வன்**

## கமலேஸ்வரன் துவாரகன்

அவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 132 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர் தற்போது கல்வி கற்கும் பாடசாலையின் 42 வருட வரலாற்றில் இப்பரீட்சையில் சித்தியடைந்த முதல் மாணவன் என்பதுடன், 2002இல் பரந்த வரணிப் பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்தமையும் குறிப்பிடத்தக்கது.

கறுக்காய் கந்தப் பெருமான்
சனசமூக நிலையத்தினர்,
*வரணி.*

(9160)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
10
-
08
-
1972



விண்ணில்
09
-
10
-
2000

## அமரர் யோகநாதன் கியூபேட் (றஜீஸ்)

*(சண் ரெக்கோடிங் ஸ்பொட்)*

**என் வாழ்வில் வந்த தேவ மின்னலே**
**எனை விட்டு மறைந்தாயோ?**

*அன்புக்கு இலக்கணமாய்*
*பண்புக்கு ஒளி விளக்காய்*
*உறவுக்கு உத்தமனாய்*
*வாழ்ந்து காட்டிய - என்*
*உயிர்க் கணவனே!*
*விதி செய்த சதியாலே*
*எமை விட்டுப் பிரிந்தீரோ?*
*நாம் பெற்றெடுத்த பாலகர்*
*தவிக்கின்றனர் உமை நினைத்து!*
*எம் துயர் துடைக்க ஓடோடி வாரீரோ?*

உங்கள் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(9171)

உங்கள் நினைவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பூவுலகில்
14
-
05
-
1960



வானுலகில்
11
-
09
-
2002

## திருமதி இரகுநாதன் ஜெயநாயகி

**அன்பும் பண்பும் நிறைந்த அணையாத அகல்விளக்கே!**
**உங்கள் நினைவும் என்றும் எம் நெஞ்சங்களில்**
**நிலைத்திருக்கும்.**

அமரரின் அவஸ்தை நிலையிலும், அவ்வொளி விளக்கு அணைந்த வேளையிலும், உடன் நின்று விண்ணக வழியனுப்பும்வரை பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அன்பு இதயங்களுக்கும்,

தம் அனுதாப உணர்வுகளைச் சொல்லிலும், செயலிலும், மலா வளையம் சாத்தியும், துயர் தெரிவித்த அன்பு நண்பர்கள், உறவினர் அனைவருக்கும் 15. 09. 2002 நடைபெற்ற இறுதிக்கிரியையில் கலந்து எமக்கு ஆறுதல் நல்கிய அனைத்து அன்பு இதயங்களுக்கும்,

எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு (11. 10. 2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அன்றைய மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:* தவிர்க்கமுடியாத காரணத்தினால் தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம். எமது துக்க நிகழ்வில் பங்குகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்றைய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*பரல்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
T.P.:077-111021

(சி-24119)

அன்புடன்:
கணவர், மக்கள்,
தாய், சகோதரர்கள்.

## பனை நடும் திட்டம்

கொடிகாமம், ஒக்.9

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைதடி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில பனை மரம் நடுகைத் திட்டம் இன்று புதன்கிழமை காலை 9:30 மணிக்கு 521 படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் தில்லை ஜெயவர்த்தன தலைமையில் நடைபெறவுள்ளதாக இராணுவ சிவில் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## பரிசில் நாளும் நிறுவுநர் தினமும்

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் பரிசுத் தினமும், நிறுவுநர் நாள் நிகழ்வுகளும் வித்தியாலய கந்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் கா.நடராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவபீட பீடாதிபதி வைத்திய கலாநிதி ஆனந்த மூர்த்தியும் அவர்தம் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

சிறப்புவிருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா ஆகியோர் கலந்துகொள்வர்.

நிறுநெர் நினைவுப் பேருரையை வித்தியாலய பழைய மாணவியும், திருகோணமலை கல்வி வலய கல்வி ஆலோசகருமான திருமதி நாகராணி சீதரன் நிகழ்த்துவார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (எ-28)

## பதில் கடமை நியமனம்

கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி புனிதம் தங்கராசா ஓய்வுபெற்றதை அடுத்து பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் பதில் கடமையின் நிமித்தம் கரவெட்டியிலும் பணியாற்றி வருகின்றார். (எ-ரி)


# BRIGHT BOOK CENTRE (PVT) LTD
**P.O. BOX 162 COLOMBO**

**புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் நூலக வார நிகழ்வு 07.10.2002 முதல் 11.10.2002வரை நடைபெறுகிறது. இதில் விசேட கழிவுகளாக 10% முதல் 50% வரை வழங்கப்படுகிறது. (9182)


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
11
-
01
-
1963



உதிர்வு
13
-
10
-
1999

## அமரர் கந்தையா சிவகுமார் (சிவா)

ஆண்டுகள் மூன்று சென்றதையா - நீங்கள்
எமையெல்லாம் ஆறாத் துயரில்
ஆழ்த்திவிட்டு - மீளாத் துயில்
கொண்டதேனோ? எமை விட்டுச்
சென்றாலும் உங்கள் நினைவுகள்
ஒருபோதும் எமை விட்டகலாது!

*இல.268/5, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(9183)

- பெற்றோர், மனைவி,
மகள், சகோதரர்கள்.


# Canadian College of Business & Computers



Offers
$4 Million
in Scholarships
to study in Canada

CCBC

**Scholarships will be awarded as follows:**

10 Awards of Partial Tuition CDN $ 17,000 each
10 Awards of Partial Tuition CDN $ 13,000 each
80 Awards of Partial Tuition CDN $ 11,000 each
155 Awards of Partial Tuition CDN $ 9,000 each
200 Awards of Partial Tuition CDN $ 7,000 each

Scholarship application forms are available at:
24, Temple Lane,
Colombo 3,
Sri Lanka.
Tel: 507176

The deadline for receipt of completed applications is October 10th, 2002. Please ensure you submit the following documents along with your application to the following address from 5th to 10th October 2002

Scholarship Application & Admission
Canadian College of Business & Computers
Room 26-02
Bandaranaike Memorial
International Conference Centre
Bauddhaloka Mawatha, Colombo 07,
Sri Lanka.

**Scholarship Application Requirements:**

1. School Character Certificate
2. Copy of your Passport
3. Copy of your Birth Certificate
4. Copy of your Educational Certificates/Transcripts
5. Employment Letter (If any)
6. Proof of sufficient funds for living expenses for two years – (US $ 10,000) and tuition payment ranging from US $ 1,500 to US $ 8,000, depending on the scholarship award you would receive
7. Fee of US $ 13 by Demand Draft in favor of "Canadian College of Business & Computers"

**Aptitude Test**
Date: October 12th and 13th
Time: 10:00 am to 4:00 pm

**Interview**
Date: October 14th
Time: 10:00 am to 4:00 pm

**Location**
Bandaranaike Memorial
International Conference Centre
Bauddhaloka Mawatha, Colombo 07,
Sri Lanka.

**Ready for the challenge? Welcome to Canada for your studies.**

Contact Person: Meena Thyagarajan
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1-416-413-1234
fax: 1-416-413-0314
e-mail: meena@ccbc.ca

eSTUDIES

"Education is the foundation of Human Development, Security and PEACE"

WWW.CCBC.CA

BT Options

# தமிழ்க் கைதிகள் விடுதலை விவகாரத்தில் அரசு பேரினவாதிகளுக்கு அஞ்சுகின்றதா?

## கிழக்கு பல்கலைக்கழக சமூகம் கேள்வி

செங்கலடி,ஒக்.9

விடுதலைப் புலிகளுடன் கைகுலுக்கி தாய்லாந்தில் பேச்சு நடத்த அரசாங்கத்திற்கு முடியுமாயின் விடுதலைப் புலிகளுக்கு உணவு வழங்கியமை, அடைக்கலம் வழங்கியமை, நடமாட்டம் தெரிந்தும் தகவல் கொடுக்காமல இருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி சிறையில் அடைத்திருக்கும் தமிழ்க் கைதிகள் எவ்வித நிபந்தனையுமின்றி ஏன் விடுதலை செய்ய முடியாது? இது விடயத்தில் அரசு ஏன் திண்டாடுகின்றது? மீண்டும் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்த அது முயற்சிக்கின்றதா? அல்லது அவர்களைக் கண்டு பயப்படுகின்றதா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறது கிழக்குப் பல்கலைக்கழக சமூகம்.

தமிழ்க் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி பல்கலைக் கழகச் சமூகம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டு விசாரணை எதுவுமின்றி தடுத்து வைக்கப்படுவதுடன் சித்திரவதையும் செய்யப்படுகின்றார்கள்.

இன்று தோன்றியுள்ள சமாதானச் சூழ்நிலையில் சிங்கள இராணுவத்திலிருந்து கணாமற்போனோர் தொடர்பாக 'காணாமல் போனோர் படைவீரர் சங்கம்' போராடி வருகிறது. ஆனால், சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் விடுதலை செய்வதற்கு யாரும் முயற்சிப்பதாகத் தெரியவில்லை.

தென்னிலங்கையிலும் மட்டக்களப்பு சிறையிலுமாக ஏறக்குறைய 250 தமிழ்க்கைதிகள தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் களுத்துறைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகள் கடந்த ஏழு நாள்களாக தமது விடுதலைக்காகச் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்திவருகின்றனர். இவர்களுடன் இணைந்து வெலிக்கடைச் சிறைச்சாலையில் 11 யுவதிகளும், மகஸீன் சிறைச்சாலையில் 8 இளைஞர்களும், மட்டக்களப்பு சிறைச்சாலையில் 16 இளைஞர்களும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

இவர்களின் போராட்டத்தினை இதுவரை அரசாங்கம் கவனத்திலெடுத்ததாகத் தெரியவில்லை. உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க் கைதிகளில் 17 பேர் இரத்தவாந்தி எடுக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையிலும் மனவுறுதி தளராது தொடர்ந்தும் தமது போராட்டத்தினை அவர்கள் நடத்திவருகிறார்கள்.

சிறையில் வாடும் தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக அவர் களுடன் இணைந்து சகல வெகுஜன அமைப்புக்களும் சாத்வீகப் போராட்டத்தினை நடத்த முன்வரவேண்டும்.

சிறையில் இருக்கும் எமது உடன் பிறப்புக்கள் தமது விடுதலைக்காக மரணிக்கும் புதிய அத்தியாயம் எழுதப்பட நாம் அனுமதிக்க முடியாது. எமது உடன் பிறப்புக்களின் விடுதலைக்காக சர்வதேசமெங்கும் உரத்து முழக்கமிட எழுந்து வாரீர்.

- என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ம)

## தியாகச் சாவுக்கு நாம் தயாராகிவிட்டோம்

# நாம் உயிரிழந்தாலும் கூட புலிகளுடன் சமாதானப் பேச்சைத் தொடருங்கள்!

## பிரதமருக்கு கைதிகள் உருக்கமான கடிதம்

கொழும்பு,ஒக்.9

"மனிதாபிமான அடிப்படையில் எம்மை விடுவிக்க அரசு தவறினால் நாம் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் தியாகச்சாவை சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். ஆனால், எமது சாவு இந்த நாட்டில் சமாதானம் மலர்வதற்குக் குந்தகத்தை ஏற்படுத்தக் கூடாது. எனவே, இந்த உண்ணாவிரதப் போராட்டத்தினால் நாம் சாவைச் சந்தித்தால் அரசும் புலிகளும் சமாதான முயற்சிகளை முறித்துக்கொள்ளக்கூடாது. நாட்டின் அனைத்துப் பிரஜைகளினதும் நன்மையைக் கருத்தில் கொண்டு சமாதான முயற்சிகளை தொடரவேண்டும்."

இப்படியான கோரிக்கை ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்திருக்கிறார்கள் களுத்துறை சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க்கைதிகள்.

நேற்றுமுன்தினம் தம்மைச் சந்திக்க வந்த அமைச்சர் தி.மகேஸ்வரன் மூலம் கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பிவைத்தார்கள் அவர்கள்.

அந்தக் கடிதத்திலேயே மேற்படி கோரிக்கையை அவர்கள் முன்வைத்தனர்.

"நாம் இறந்தாலும் சமாதான முயற்சிகளை தொடருங்கள் என்று மாண்புமிகு பிரதமராகிய உங்களைக் கோருகின்றோம்" - என்று கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மனதை உருக்குவதாக அமைந்திருந்தது.

"விடுதலை அல்லேல் உயிர் துறப்போம்"- என்ற தலைப்பில் வரையப்பட்ட அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இச்சமாதானச் சூழ்நிலையில் தண்டனை பெற்ற மற்றும் விளக்கமறியலிலுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகளையும் முறையே பொது மன்னிப்பிலும் எந்தவொரு நிபந்தனையும் இன்றி மனிதாபிமான அடிப்படையில் அரசு உடன் விடுதலை செய்யவேண்டும்.

"இந்தக் கோரிக்கையை முன்வைத்து நாம் ஐந்தாம் கட்டமாக கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். அது எமது விடுதலை அல்லது சாவுவரை உறுதியாகத் தொடரும் என்பதை மிகவும் துயவுடன் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

"தாங்கள் திட்டமிட்டுள்ள சமாதானமும் அபிவிருத்தியும் என்ற செயற்றிட்டங்கள் வெற்றிபெற வாழ்த்துவதுடன் அதற்காகப் பிரார்த்தித்தும் நிற்கின்றோம்.

"நாம் சமாதான முயற்சிகளை குழப்புவதற்காக அல்ல சமாதானத்தை அனுபவிக்கவே போராடுகின்றோம்.

"எந்த விதமான வாக்குறுதிகளையும் நாம் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை மனிதாபிமான அடிப்படையில் எம்மை விடுதலை செய்யுங்கள். எதிர்வரும் தீபாவளித் திருநாளை எமது உறவுகளுடன் நாம் கொண்டாட உதவுங்கள்."

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

# சு.கட்சி, ஜே.வி.பி. இணைந்து கொழும்பில் எதிர்ப்புப் போராட்டம்

## ஈராக் மீதான இராணுவ அழுத்தங்களுக்கு கண்டனம்

கொழும்பு,ஒக்.9

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டு வரும் இராணுவ அழுத்தங்களுக்கு கண்டனம் தெரிவித்து கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதற்குப் பொலீஸார் பல தடைகள் போட்டபொழுதும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அந்தத் தடைகளையும் மீறி தூதரகத்துக்குள் நுழைந்து அமெரிக்கத் தூதுவரிடம் மகஜர் ஒன்றினைக் கையளித்தார். (ம-4)

# வரி விலக்குக் கோரி பிரதமருக்குத் தந்தி

## கூ. சங்கங்கள் புதிய போராட்டம்

வடமராட்சிகிழக்கு,ஒக்.9

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரி விலக்கு அளிக்கக் கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடெங்கும் இருந்து தந்திகளை அனுப்பும் போராட்டம் ஒன்று நாளை 10 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை கூட்டுறவுச் சபை மேற்கொண்டுள்ளது. இதன்படி நாளை 10ஆம் திகதி ஒவ்வொரு பிரதேசத்திலும் இருந்து 100 தந்திகள் வீதம் பிரதமருக்கு அனுப்பப்படும்.

அத்துடன், "கூட்டுறவுச் சங்கத்திற்கு வரி அறவிடாதே" எனக் கோரும் பதாகைகளையும் கூட்டுறவுச் சங்க எல்லைகளுக்குள் ஒவ்வொரு சங்கங்களையும் காட்சிக்கு வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வேண்டுகோளை இலங்கை கூட்டுறவுச் சபையின் உப தலைவர் பந்து ரணவக்க சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடிதமூலம் விடுத்துள்ளார்.

அரசின் புதிய வரிமுறையினால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை முன்நடத்திச் செல்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் -

ஏனைய ஸ்தாபனங்களுக்கு பல வித வரிச்சலுகைகள் வழங்கப்பட்டபோதிலும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரிச்சுமை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-182)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் கொழும்பில் பேச்சு நடத்தினார்

யுத்தநிறுத்த குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ரொண்ட் புருஹோவிட் பிரதமரின் செயலகத்தில் இயங்கிவரும் சமாதானச் செயலகப் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். நேற்றுமுன்தினம் காலை இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றன.

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 இராணுவத்தினரின் விடுதலை தொடர்பாக ரொண்ட் புருஹோவிட் கடந்த ஞாயிறன்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். கிளிநொச்சியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அந்த விவரங்களை சமாதான செயலகப் பிரதிநிதிகளிடம் அவர் விளக்கிக் கூறியுள்ளார். (ம)

## பல வருடங்களாக படையினர் பாவனையில் இருந்த

# நீர்வேலி கூட்டுறவுச் சங்க கட்டடத் தொகுதி மீளளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

கடந்த பல வருடங்களாகப் படையினரின் பாவனையில் இருந்து வந்த நீர்வேலி ப.நோ.கூ.சங்கத்தின் விற்பனை நிலையம் மற்றும் களஞ்சியம் ஆகியன உள்ளடங்கிய கட்டடத்தொகுதி சங்கத்தின் நிர்வாகத்திடம் படை அதிகாரிகளால் கடந்த ஞாயிறன்று கையளிக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் அ.ச.த.கிருஷ்ணராசாவிடம் 511ஆவது படையணியின் தளபதி கேணல் ஹேரத் கட்டடத்தை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி லெப்.கஜிமன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக்கட்டடத்தின் பழுதடைந்துள்ள விற்பனை நிலையப் பகுதியை திறக்க வசதியாக அப்பகுதியைப் புனரமைக்க நிதியுதவி வழங்குவதாக ரவிராஜ் அங்கு தெரிவித்தார். (ம-3)

# இணைய வந்த ஆறு சிறுவர்களை புலிகள் உறவினர்களிடம் ஒப்படைப்பு

செங்கலடி,ஒக்.9

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வந்த ஆறு சிறுவர்களை நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளால் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலையிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலக நிர்வாகப் பொறுப்பாளர் விமல்ராஜ் இச்சிறுவர்களை உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

திருக்கோயில், மல்வத்தை, வெள்ளியத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த செ.செல்வரமணன், தோமஸ் சுஜேந்திர்ராஜன் , லிங்கசாமி, சசிகுமார், சுபாஸ் சின்னமணி, நாகராசா நவீனன், பாலசிங்கம் பிரியதர்சன் ஆகிய சிறுவர்களே இவ்வாறு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். (ம)

# திருமலையில் கைதான இரு புலிகளை பிணையில் விடக்கோரி மனுத்தாக்கல்

கொழும்பு,ஒக்.9

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கந்தசாமி ராமசாமி, மாதவன் வசந்தன் ஆகிய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் சார்பிலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் பிணை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்தரணி திருமதி எஸ்.ஜோசப் மூலம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், தாங்கள் நிரபராதிகள் என்றும் எதுவித குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## மாணவர் பேரவையின் அலுவலகம் திறப்பு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச் செயலகம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள கட்டடத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார்.

நிகழ்வில் தேசியக் கொடியேற்றல், அமைதி வணக்கம், நினைவுச் சுடரேற்றல் மற்றும் பெயர் பலகை திரைநீக்கம் என்பன இடம்பெறவுள்ளன. (எ-10)

## அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில்

# துண்டுவிழும் தொகையை ஈடுசெய்ய ரூ.35000 கோடி கடன் பெற முடிவு

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து 35ஆயிரம் கோடி ரூபாவை கடனாகப்பெற அரசு தீர்மானித்திருப்பதாக பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறை 8.5 சதவீதமாக காணப்படுகின்றபோதிலும் அடுத்தவருடம் இந்த தொகையை 7.5 சதவீதமாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

அடுத்தவருடம் கடன் தொகையாக 196மில்லியன் ரூபாவையும் அதற்கான வட்டியாக 130 மில்லியன் ரூபாவையும் அரசாங்கம் செலுத்த வேண்டியிருப்பதாகவும் கூறப்பட்டது. (ம-4)

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

## Preamble

Whereas Tamil cultural heritage remains one of the oldest and finest in human history.

Whereas education has been traditionally valued by the people of Tamil Eelam as their prime investment and wealth.

Whereas the economic potential of Eelam has mostly been left untapped and not utilized for the good of its people.

Whereas personnel resources are scattered abroad as people have fled as refugees.

Whereas all the above wealth and infrastructure have been willfully neglected or destroyed over the past several decades by the powers that be.

Now, therefore, Tamil Eelam students living at home and abroad are resolved to form themselves into an association to pool together their resources with a view to safeguarding and actively promoting the cultural, intellectual, economic and personnel wealth of the land of Eelam and the people inhabiting it and to foster a spirit of leadership appropriate to the task of rebuilding it.

### Name of the Association

This association shall be called "The International Students' Association of Tamil Eelam."

## Aims

*Section 1* The International Students' Association of Tamil Eelam (ISATE) shall in its entirety dedicate itself to create, develop and maintain an educational system that is consistent with the advancement of Tamil Eelam and Eelam Tamils living around the world.

*Section 2* The ISATE shall assist Tamil Eelam and its people in their rehabilitation and development process, paying special attention to adversely affected students such as the orphaned and the maimed.

*Section 3* The ISATE shall give the necessary student representation to the Tamil people in general and the Tamil students in particular.




### Membership

*Membership shall be given to the following categories of people:*

* Tertiary Membership - Students from University, Colleges and vocational training institutions.

* Primary/Secondary Membership - Students from Primary and Secondary Schools.

If they meet any of the following conditions:

* Born in Tamil Eelam

* Trace their ancestry to Tamil Eelam.

* Call Tamil Eelam their permanent home.

* Have paid their membership fees in full.

## வாழ்த்துவோர்

☞ **மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்,**
யாழ். ஆயர்.

☞ **கௌரவ தி.மகேஸ்வரன்,**
நாடாளுமன்ற உறுப்பினர்.
இந்து கலாசார அமைச்சர்.

☞ **கௌரவ பெ.சந்திரசேகரன்,**
நாடாளுமன்ற உறுப்பினர்.
சமூக அபிவிருத்தி அமைச்சர். நீர்ப்பாசன
நீர் முகாமைத்துவ பிரதி அமைச்சர்.

☞ **ரவிஷங்கர் கமலச்சந்திரா,**
பொதுச் செயலாளர்.
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை.
ரொரன்ரோ பல்கலைக்கழகம். கனடா.

☞ **செல்வி ரேணுகா விஜியநாதன்,**
உப-செயலாளர். சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை. றற்கேர்ஸ் (Rutgers) University,
அமெரிக்கா.

☞ **க.விருத்தாச்சலம்,**
உப-தலைவர். சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை. கிழக்குப் பல்கலைக்கழகம்.

☞ **து.வைத்திலிங்கம்,**
யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

☞ **பேராசிரியர் ஜோசப் ஏ.சந்திரகாந்தன்,**
ரொரன்ரோ. பல்கலைக்கழகம்.

☞ **தமிழ் மாணவர் சங்கம்**
ரொரன்ரோ பல்கலைக்கழகம்

☞ **சாய் தர்மலிங்கம்**
செயலாளர். தமிழ் பல்கலைக்கழக மாணவர் - பட்டதாரிகள் ஒன்றியம்.
ரொரன்ரோ பல்கலைக்கழகம்.

☞ **கி.கதன்**
ஈழமுரசு. பாரீஸ் - பிரான்ஸ்

## நீதிக்கும் விடுதலைக்குமான மாணவ சக்தியின் களஞ்சியம்

ஒரு பெரிய ஆலமரம். இலைகள் ஒவ்வொன்றாய் கீழே விழ ஆரம்பித்தன. வீழ்ந்துகொண்டே இருந்தன. எங்கே அந்த ஓங்கிவளர்ந்த பாரிய விருட்சம் பட்டுவிடுமோ என்று யாரும் அச்சமுற்றனர். சிறிதுகாலம் சென்றது.... மீண்டும் புத்தம் புதிய துளிர்கள் தோன்ற ஆரம்பித்தன. எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

இந்நிலையில், 'தமிழ் அலை' எனக் குறிப்பிடப்படும் ஈழத்தமிழரது சர்வதேச புலம்பெயர்வின் பின்னாக குறிப்பாகத் தமிழ் மாணவரிடையே தமிழீழ மக்களினது அறிவியல், பொருண்மியம், பண்பாடு மற்றும் இதாவளங்களைப் பேணி முன்னேற்றவும், தமிழ்த்தேசத்தைக் கட்டியெழுப்பும் உந்துசக்தியாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அமைக்கப்பட்டிருப்பது மகிழ்வூட்டுகிறது.

"எமது போராட்டம் கல்விக்கு சுமையாக இருப்பதுபோல கல்வியும் எமது போராட்டத்திற்கு கரப்பாணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்துக்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப்பாடாகும்" என்ற தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வரலாற்று வேண்டுகையை இங்கு நினைவூட்டுவது சாலப்பொருத்தம்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அங்குரார்ப்பணம் செய்து பணியாற்றும் துவிகரமானதும் தொலைநோக்குள்ளதுமான முயற்சியில் ஈடுபட்டுள்ள யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை மற்றும் ரொரன்ரோ, மக்மாஸ்டர், ஹமில்டன், ஒட்டோவா, றட்கேர்ஸ், ஸ்ட்ரதாட், கேம்பிறிட்ஜ் போன்ற கனேடிய, அமெரிக்க, ஜேர்மன், பிரித்தானிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், தமிழ் கல்விமான்களுக்கும் எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைப் பெருமகிழ்ச்சியுடனும் எதிர்பார்ப்புடனும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்தகாலத்திலிருந்து அரைநூற்றாண்டுக்கு மேலாக, தமிழ்ச்சமூகத்தினால் விடுதலைக்கும், கௌரவத்துக்கும், நியாயத்துக்குமாக இடைவிடாது தொடரப்பட்ட அரசியற் போராட்ட சரித்திரத்தை நோக்கும்போது இவ்வாறான அமைப்பினை ஸ்தாபிக்கவேண்டிய நீண்டகாலத் தேவை இருந்ததுடன் அதற்கான தருணமும் இதுவாகவுள்ளது.

சட்டபூர்வமான போர்வையில் தமிழ் மாணவர்கள்மீது திணிக்கப்பட்ட அரச அனுசரணையுடனான பல்வேறு வகையில் அமைந்த ஒடுக்குமுறைகள், தேசிய, சமூக - பொருளாதார அரங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் செயலூக்கமுள்ளவர்களாகத் தமிழ்மாணவர்கள் வருவதற்கு காரணமாயின. இதன் விளைவாக தமிழீழத்தின் மாணவர் சமூகமானது அரசியல் ரீதியாக அதிக விழிப்புணர்வு பெற்றது. அரசியல் பங்களிப்பில் பாராட்டத்தக்க மட்டத்தையடைந்துள்ளது. அத்துடன் தெற்காசியாவிலுள்ள தமது சகபாடிகளைவிட, இச்சமூகம் அதிகளவு தேசிய, மொழி, கலாசார, பிரதேச ஒருமைப்பாட்டு உணர்வுகளைக் கொண்டுள்ளது.

ஈழத்தமிழர்களில் 50,000இற்கும் அதிகமானவர்கள், உலகெங்கிலுமுள்ள மிகவும் சிறப்புப் பல்கலைக்கழகங்களில் பட்டதாரி மற்றும் பட்டதாரி மாணவ மட்டங்களில் தமது கல்வி இலக்குகளைத் தொடர்ந்துகொண்டிருப்பதைக் காண்கையில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. உள்நாட்டு யுத்தத்தினால் பேரழிவுற்ற தமிழீழத்தைக் கட்டியெழுப்பி புத்துயிரளிப்பதற்கு இது ஒரு விலைமதிப்பற்ற மூலவளமாகும்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையானது சர்வதேச மாணவர் சமூகங்களிடையே ஒரு பாலமாகப் பயன்படுவது மட்டுமல்லாது, ஜனநாயகமற்ற அரசியல், இராணுவ, அரசமைப்பு முறையினால் உடல், உள ரீதியாகத் தமது சொந்த நாட்டில் காட்டுமிராண்டித்தனமாக அச்சுறுத்தலுக்குள்ளாகும், அதற்கு எதிராகக் குரலெழுப்பமுடியாதுள்ள தமிழ்மக்களின் அச்சங்களையும், கண்ணீரையும் போக்குவதற்கும் பின்நிற்காது என்பது எமது அசையாத நம்பிக்கையாகும்.

சர்வதேச ரீதியில், இளம் சந்ததியினருக்கு தாய் மண்ணில் சர்வை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முயற்சி, காலத்தின் நிர்ப்பந்தத்தால் உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்டிருக்கும் அனைத்துத் தமிழ்மக்களையும் தாய் மண்ணில் ஒன்றிணையச் செய்வதோடு, தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் சகல துறைகளிலும் தமிழீழ மாணவர்கள் தமது சாதனைகளைத் தொடர்ந்தும் நிலைநாட்ட வழியமைக்கவேண்டும்! எமது மண்ணின், எமது மக்களின், எமது இனத்தின் விடிவுக்காக உழைக்க வேண்டும்! உயர்ந்த இலட்சியமும் உண்மையான உழைப்பும் இணைந்துவிட்டால் விடிவு நிச்சயம். எமது தமிழீழ மாணவர்கள் நாளைய புது யுகத்தினைப் படைக்க முன்னோடியாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் ஓங்கிய குரலாய், சர்வதேச தமிழீழ மாணவ சமூகத்தின் பிரதிநிதியாய் வீறுநடை போடப்போகும் இந்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வியாபித்து பெருவிருட்சமாக ஆசி வேண்டுவதோடு, எமது பூரணமான ஆதரவையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தோற்றம் பெறும் நிகழ்வு எமது இனத்தின் வரலாற்றில் முக்கியமான ஒரு நிகழ்வாக அமையக்கூடும்; அமையவும் வேண்டும்! எமது நாளைய சந்ததிக்காய் ஓர் ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்பும் கடமையைச் செய்யவேண்டும். சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இம்முயற்சியில் வீறுடன் செயற்படும்போது இப்பேரவை வெற்றி பெற்றதற்காக எம் வரலாறு பதிவுசெய்துகொள்ளும் அந்த வெற்றிக்காய் வாழ்த்துகிறோம். ☆

## வாழ்த்துவோர்

☞ **Dr.சி.குமாரவேள்**
செயலாளர்.
அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம்.
யாழ். கிளை

☞ **அ.கி.சிவசுப்பிரமணியம்**
கௌரவ செயலாளர்.
அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

☞ **வி.தயாபரன்**
செயலாளர்.
மாணவர் ஒன்றியம்.
உயர் தொழில்நுட்ப நிறுவனம்.

☞ **பா.சிவரூபன்**
செயலாளர். பகல்நேர மாணவர் மன்றம்.
தொழில்நுட்பக் கல்லூரி.

☞ **தமிழ் மாணவர்கள்**
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

☞ **தி.தவநேசன்**
மாணவர் ஒன்றியம்.
பலாலி ஆசிரியர் கலாசாலை.

☞ **யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி**

☞ **சுப்பிரமணியம் பரமநாதன்**
தலைவர்.
மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம்.
யாழ்.மாவட்டம்.

☞ **சி.சிவபாலன்**
தலைவர்.
தமிழ் இலக்கிய மன்றம்.
மொறட்டுவ பல்கலைக்கழகம்.

☞ **த.மகாசிவம்**
பொதுச் செயலாளர்.
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

(C/24136)

தமிழீழ பெண்கள் எழுச்சிதினம்

# மட்டக்களப்பில் புகைப்படக் கண்காட்சி; உருவச்சிலை திறப்பு, பொதுக்கூட்டம்!

மட்டக்களப்பு,ஒக்.9

விடுதலைப் புலிகளின் முதல் பெண் போராளி மாலதி நினைவாக நாளை வியாழக்கிழமை தமிழீழப் பெண்கள் எழுச்சிதினம் மட்டக்களப்பிலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

எழுச்சி தினத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய கல்லூரி மைதானத்தில் பெண் போராளிகளின் வீர தீரச் செயல்களைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி நடைபெறும்.

1998ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த கன்னங்குடாவைச் சேர்ந்த பெண் போராளி லெப்டினன்ட் கேணல் ஞானியின் உருவச்சிலை நேற்று தாண்டியடியில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

எழுச்சி தினமான நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய், கல்லடி முருகன் கோயில் ஆகிய இடங்களிலிருந்து திரளும் பெண்கள் பேரணிகள் சிவானந்தாக் கல்லூரி மைதானத்தில் சங்கமிக்கும். அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

மட்டு. - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பானுகா, இராணுவப் புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன் ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றுவர்.

மட்டக்களப்பு பெண்கள் சமூக மேம்பாட்டு குழுவினால் 'கொண்டல்' என்ற புதிய பத்திரிகையும் வெளியிடப்படவுள்ளது.

வாகரை, படுவாம், திருக்கோயில ஆகிய இடங்களிலும் பெண்கள் தின எழுச்சிக் கூட்டங்கள் பெண்கள் விளையாட்டு நிகழ்ச்சி என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம)

தடுத்து வைக்கப்பட்டுள்ள

# படையினரின் விடுதலை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.9

விடுதலைப் புலிகளால் திருகோணமலையில் வைத்து கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு படையினரையும் விடுவிப்பதற்கு அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகிறது என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குமாருடனான சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி இராணுவத்தினரின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நாம் பேச்சு நடத்தவுள்ளோம்.

இதேவேளை - படைத்தரப்பினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு விடுதலை புலி உறுப்பினர்களின் விடுதலை தொடர்பாக பொதுவான சட்டம் ஒன்று பயன் படுத்தப்படும்.

- என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-4)

தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவாக

# கிழக்கு பல்கலை. மாணவர்கள் அடையாள உண்ணாவிரதம்

செங்கலடி,ஒக்.9

சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுமுன்தினம் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டிருந்த பந்தலின்கீழ் இவர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். காலை 9 மணி முதல் பிற்பகல் 3மணிவரை அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. இதனால் விரிவுரைகள் எதுவும் இடம்பெறவில்லை

இதேவேளை, இந்த உண்ணாவிரதத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு எதிரே வீதியில் வாகனங்களில் சென்ற பயணிகள் வாகனங்களில் இருந்து இறங்கி நடந்து சென்றனர். (ம-4)

தமிழ் அரசியற் கைதிகளின்

# உண்ணாவிரதத்தில் உயிரிழப்பேற்பட்டால் சமாதானச் சூழலை அது பாதிக்கும்!

## புளொட் அமைப்பு எச்சரிக்கிறது

வவுனியா,ஒக்.9

தமிழ்ச் சிறைக்கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தில் உயிரிழப்பு நேருமானால், அது சமாதானப் புறச்சூழலை பெரிதும் பாதிக்கும்.

- இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) எச்சரித்துள்ளது.

'விசாரணை செய் அல்லது விடுதலை செய்' என்ற கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி 'புளொட்' வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் நிரந்தர சமாதானத்திற்கான சூழல் உருவாகியுள்ள இவ்வேளையில் பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைதாகி வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகளை விடுதலை செய்ய அரசு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்வேண்டும். "விசாரணைக்கு உட்படுத்து அல்லது விடுதலை செய்" என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ் அரசியற் கைதிகள் உண்ணாவிரதமிருப்பதும், ஒரு சில அரசியற் கட்சித் தலைவர்கள் தத்தமது சுயவிளம்பரத்திற்காக சிறைச்சாலைகளுக்குச் சென்று வெறும் வாக்குறுதிகளை வழங்கி போராட்டத்தை நிறுத்துவதும் வழக்கமாகிவிட்டது. இந்நிலையில் தற்பொழுது தமிழ் அரசியல் கைதிகளினால் தமது விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு முன்னெடுக்கபட்டுள்ள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) யினராகிய நாம் எமது முழு ஆதரவினை தெரிவித்துக்கொள்வதுடன், ஒட்டு மொத்தமான தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலைக்கான வெகுஜனப் போராட்டத்திற்கும் எமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றோம்.

தற்போது சிறைச்சாலைகளில் நடைபெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டத்தின் விளைவாக உயிரிழப்பு எதுவும் ஏற்படுமிடத்து அது இன்றைய சமாதானப் புறச்சூழலை நிச்சயம் பாதிக்கவே செய்யும். தமிழ் மக்களின் மனங்களில் கருக்கொண்டு வரும் நம்பிக்கையும் சிதறடிக்கப்பட்டுவிடும்.

எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை அலட்சியப்படுத்தி இழுத்தடிக்காமல், இதை ஓர் அரசியல் பிரச்சினையாக அணுகி அரசு மனிதாபிமான ரீதியில் அவர்களை உடன் விடுதலை செய்யவேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது. (ஒ)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு:

# மேல் மாகாணசபை செயலரை 11ஆம் திகதி ஆஜராக உத்தரவு

கொழும்பு,ஒக்.9

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக மேல் மாகாணசபையின் செயலாளர் கமகேக்கு எதிர்வரும் 11ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த டிக்சன் பெரேரா 2001ஆம் ஆண்டு மேல் மாகாணசபைத் தலைவர் தேர்வுக்கான தேர்தலில் தாம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றும் தமக்கு தலைவர் பதவி வழங்கப்படாமல் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினருக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, அதை எதிர்த்து சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரணை செய்த மாவட்ட நீதிபதி டிக்சன் பெரேராவுக்கே தலைவர் பதவி வழங்கவேண்டுமெனத் தீர்ப்பு வழங்கினார்.

ஆனால், அந்தத் தீர்ப்பை அலட்சியம் செய்த காரணத்தினாலேயே நீதிமன்றத்தை அவமதித்தார் எனவும் அதற்காக அவரை நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறும் மாவட்ட நீதிபதி மாலினி குணரட்ன உத்தரவிட்டிருக்கின்றார். (எ)

# தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

இலங்கைத் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிகள் திணைக்களம் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2003 ஆம் கல்வி ஆண்டுக்கான பயிற்சி நெறிகளை மேற்கொள்ள தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது. விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள கற்கை நெறிகள் வருமாறு:-

எந்திரவியல் தொடர்பான படவரைஞர், வர்த்தகம் கைத்தொழில் மற்றும் தொடரும் கல்விக்கான ஆங்கிலம், சந்தைப்படுத்தல், கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர், சுருக்கெழுத்து தட்டெழுத்து (ஆங்கிலம், தமிழ்) எந்திரவியல்சார் கைப்பணியாளர் (இலத்திரனியல்), பொறியியல்,மின்னியல், மோட்டார் வாகனம் திருத்துதல், கட்டட நிர்மாண தொழில்நுட்பம், குடிசார் தொழில்நுட்பவியல், கைத்தொழில் வர்த்தகம் மற்றும் தொடரும் கல்விக்கான ஆங்கிலம்.

சந்தைப்படுத்தல், கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர், சுருக்கெழுத்தாளர்(தமிழ்), மின்கம்பி இணைத்தல், டிராக்டர் தொழில்நுட்பம், விவசாய உபகரணம் பராமரித்தல், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் திருத்துதல் இக் கற்கைநெறிகள் தேசிய சான்றிதழுக்கு உரியவை.

ஜி.க.பொ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த இருபாலாரும் இக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் - அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் விண்ணப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறும்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ்.செந்தில்நாதன் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## தாளையடி தபாலகம் சொந்த இடத்தில்

செம்பியன்பற்று,ஒக்.9

தாளையடி தபால் அலுவலகம் இடம்பெயர்ந்த காலம் முதல் புலோலியில் இயங்கிவந்தது. ஆனால், கடந்த முதலாம் திகதி முதல் சொந்த இடமான தாளையடியில் இயங்கத் தொடங்கியுள்ளது. (எ-நி)

## சண்டிலிப்பாயில் முதியோர் தினவிழா

நவாலி,ஒக்.9

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் முதியோர் தினவிழா இன்று காலை 10 மணிக்கு பிரதேச செயலர் தா.தேவநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இவ்விழாவில் முதியோர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுவதுடன், கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். (எ-100)

## வல்லைவெளியில் பாறை அகழ்வு தொடர்கிறது

கரவெட்டி,ஒக்.9

இயற்கைவளம் பேணுவோரின் எதிர்ப்புக்கிடையே வல்லைவெளிப் பகுதியில் பாறைக் கற்கள் தொடர்ந்து அகழப்படுகிறது. இப்பாறைக் கற்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றி அகழ்ந்தெடுக்கப்படுவதால் பல பாதிப்புகள் உருவாகலாம் என அஞ்சப்படும் நிலையில், பாறை அகழ்வு நடவடிக்கை தொடர்வதாகக் கூறப்படுகிறது(ஒ-70)

## கிளைக்கடை திறப்பு

- சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோவில்குடியிருப்புக் கிளைக் கடை கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் சொந்தக் கட்டடத்தில் மீள இயங்கிவருகிறது.

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த இக்கடை புனரமைக்கப்பட்டு மீள இயங்குவதாகவும், சங்க எல்லைப் பரப்பில் மீள ஆரம்பிக்கப்பட்ட 20ஆவது கிளைக்கடை இதுவெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, உடுப்பிட்டியில் இயங்கி வந்த சங்கத்தின் கிளைக் கடை கடந்த வாரம் மூடப்பட்டுள்ளதாகவும் -

இக்கிளைக்கடையில் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் பெற்றுவந்தவர்கள் நெல்லியடியில் உள்ள கிளையில் பெற்றுக்கொள்ளலாமெனவும் - சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமாரன் தெரிவித்தார். (ஒ-117)

## தீர்வு கிட்டாவிடில் போராட்டமாம்

கொழும்பு,ஒக்.9

தமது கோரிக்கைகள் தொடர்பாக இன்று புதன்கிழமை உரிய தீர்வு கிட்டாவிட்டால் பதிவுசெய்யப்பட்ட உதவி மருத்துவர்கள் அனைவரும் வீதியில் இறங்கிப் போராட்டம் செய்வர் என்று நேற்றுமுன்தினம் ஹொட்டல் நிப்போனில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் உதவி மருத்துவ சங்கச் செயலாளர் மஹிந்த லியனகே தெரிவித்தார்.

ஒரு லட்சத்திற்கு அதிகமான வெளிநோயாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அதற்குத் தாங்கள் பொறுப்பாளர்கள் அல்லர் எனவும் கூறிய அவர், தீர்வு காண்பதாக சுகாதார அமைச்சர் தயாரத்ன கூறிய போதிலும் இன்றுவரை தீர்வு காணப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

நல்லூர்க் கல்விக்கோட்டம்

# சிறுவர், முதியோர் தின போட்டி முடிவுகள்

நல்லூர்க்கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் அண்மையில் நடத்தப்பட்ட சிறுவர் மற்றும் முதியோர் தினப்போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**சிறுவர் தினப் போட்டிகள்**

**கவிதை**

உயர்பிரிவு:- முதலாமிடம்- அனோஜா தவராசா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

மேற்பிரிவு:- முதலாமிடம் - சி.ஜனகன்(யாழ்.இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம் - சரிதா கந்தசாமி(யாழ். இந்துமகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - டிலீசியா நற்குணராசா(யாழ். கலட்டி மெ.மி.த.க.பாடசாலை).

மத்தியபிரிவு:- முதலாமிடம் - ஜெ.சர்மிளா(கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), இரண்டாமிடம் - ஸ்ரீ.பவித்ரா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - சி.சேரன்(யாழ்.இந்துக் கல்லூரி).

கீழ்ப்பிரிவு:- முதலாமிடம் -தயாதர்சன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் -ந.பவீஜா (நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), மூன்றாமிடம் - ச.சோபிதா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

**கட்டுரை**

உயர்பிரிவு:- முதலாமிடம் - ரூ.குருபரன் (யாழ்.இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - சுபாகினி இராசேந்திரம்(யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

மேற்பிரிவு:- முதலாமிடம் - சீ.ருசாந்தினி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - ப.பசிரோசா (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை), மூன்றாமிடம் - த.மோகனதீபன்(கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம்).

மத்தியபிரிவு:- முதலாமிடம் - ஞா.சரஞ்சனா(நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை), இரண்டாமிடம் - யோ.றொபின்திரா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - ஆ.கஜேந்தினி(கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயம்).

கீழ்ப்பிரிவு:- முதலாமிடம் - ந. சதீஸ்காந்(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் - இ.கோபிகா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), மூன்றாமிடம் - ஜோ.சன்யுகா((கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை).

**முதியோர் தினப்போட்டிகள்**

**கவிதை**

உயர்பிரிவு- முதலாமிடம் யாமினி நவராசா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

மேற்பிரிவு:- முதலாமிடம் - சி. சிவமோகன்(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - சி.ஜனகன் (யாழ்.இந்துக் கல்லூரி).

மத்தியபிரிவு:- ஆ.பிரியந்தினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

கீழ்ப்பிரிவு:- முதலாமிடம் - சு. மயூரதன்(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் - ச.தேவசுகன்,ஜா(யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), மூன்றாமிடம் - உ.பரணிகா(திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை).

**கட்டுரை**

உயர்பிரிவு:- முதலாமிடம் - ஜெயபிரபா ஜெகதீஸ்வரன்(யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

மேற்பிரிவு- முதலாமிடம் பு. பாமினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - கெ.துகனேசுவரி (கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), மூன்றாமிடம் - செ. சரண்யா(கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்).

மத்தியபிரிவு - முதலாமிடம் - இ.சசிகலா(அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை), இரண்டாமிடம் - செ.சாலினி(யாழ்.கலட்டி மெ.மி.த.க. பாடசாலை).

கீழ்ப்பிரிவு- முதலாமிடம் - ஆ. சுபகா(யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் - கீர்த்திகா(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை). (எ-10)

# தலைமறைவாக இருந்தவர் கைது!

யாழ்ப்பாணம்,ஒக்.9

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் விசாரணையை எதிர்கொண்டிருந்த வேளையில் தலைமறைவான நபர் ஒருவர் இரண்டரை வருடங்களின் பின்னர் கோப்பாய்ப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த இராசேந்திரன் ஜெயக்குமார் என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இவர் தலைமறைவாகியதை அடுத்து யாழ்.நீதிமன்றத்தால் இவருக்குப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து மீண்டும் கடந்த 5ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இவர் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து அவரை புதன் கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

(ஒ-10)

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி

வன்னிப் பிரதேச மாட்டு வண்டிச் சவாரியாளர்கள் நடத்தும் சவாரிப் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் சவாரித் திடல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சவாரி மாடுகள் இங்கு கொண்டு வரப்பட்டு போட்டியில் பங்குகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

## யாழ். மாணவனுக்கு கொழும்பில் பாராட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.9

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவன் பாலஸ்கந்தன் கார்த்திக்குக்கு எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள விழாவில் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

இந்த விழாவிற்கு மனிதவள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் தலைமை தாங்கவுள்ளார்.

(ஒ-ரி)

# ஜேர்மனிய அமைச்சு உதவி நடவடிக்கை

தென்மராட்சி,ஒக்.9

தென்மராட்சிப் பிரதேசத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களுக்கு மனிதாபிமான உதவிகளை ஜேர்மன் அபிவிருத்தி உட் கட்டமைப்பு அமைச்சு ஜேர்மன் அக்றோ செயற்பாடு அமைப்பின் உதவியுடன் வழங்கிவருகிறது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களுடன் விவசாய உபகரணங்களையும் அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகங்களில் வைத்து இந்த அமைப்பினர் வழங்கி வருகின்றனர்.

இந்த உதவிகளை வழங்குவதற்கென சாவகச்சேரியில் அலுவலகமும் திறக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவஞானம் மேரிரெலிந்தா (பவளம்)

*(அல்லைப்பிட்டி)*

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது வெள்ளாந்தெரு, வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் மேரிரெலிந்தா (பவளம்) 07.10.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலுப்பையா - லில்லியம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் - விசாலாட்சியின் அன்பு மருமகளும் சிவஞானம் (கந்தசாமி) அவர்களின் அருமை மனைவியும் ரூபரஞ்சினி, ரூபநந்தினி, ரூபரஞ்சிதன் (பாபு), ரூபஜெந்தன் (ராஜா), ரூபகாந்தன் (பிரபா), ரூபரஜனி (ரஜி), ரூபராஜன் (டினேஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயராஜா (பிரான்ஸ்), இராசவேல், பகீரதன் (கனடா), வாசுகி, கவிதா ஆகியோரின் அன்பு மாமியும் இராஜேந்திரம், காலஞ்சென்ற மேரிபிளசம் (கிளி), இரத்தினம், மனோன், செல்வரட்ணம், ஜெயக்கொடி, ஜீவா ஆகியோரின் சகோதரியும் சோமலிங்கம், குமாரசாமி, சௌந்தரம், சின்னத்துரை, இராசம்மா, சின்னம்மா, மகேந்திரம், பாலசிங்கம், தெய்வேந்திரம், இராஜேந்திரம், தையல்நாயகி, சற்குணம், வீரகத்திப்பிள்ளை, சோமசுந்தரம், மதலேனம், ரஞ்சிதமலர், பிரான்சீஸ், நாகலெட்சுமி, றெஞ்சனாமலர், மாலினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (09.10.2002) புதன் கிழமை வெள்ளாந்தெரு வைரவர் கோயிலடியில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு அல்லைப்பிட்டி உத்தரிய மாதா கோயிலில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*வைரவர் கோயிலடி,*
*வெள்ளாந்தெரு.*
T.P.: 077-110053

(9228)

தகவல்:
ஆ.சிவஞானம் (கந்தசாமி)
(கணவர்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## புலமைப் பரிசில் பரீட்சை - 2002

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த பாஷையூரைச் சேர்ந்த மாணவர்களான



நோ.மேரிமயூறி
புள்ளிகள் 142



அ.நிஷாந்தன்
புள்ளிகள் 125



ம.மயூரன்
புள்ளிகள் 124



ஞு.அலெக்ஸ் டியோன்
புள்ளிகள் 118,

ஆகியோரை மனமுவந்து பாராட்டுவதுடன் அவர்கள் கல்வியில் மேலும் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

*பாஷையூர்.* (9231) - புனித அந்தோனியார் இளைஞர் கழகம்.


# வட மாகாணத்தின் வளர்ச்சியை வடிவமைத்து வர்த்தக அபிவிருத்திக்கு உதவுதல்




வர்த்தக உலகத்துடன்
உங்களை இணைக்கிறது

**SHARP**

அலுவலக கருவிமயமாக்கல் தயாரிப்புகள்
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...

பிரவுண் அன் கம்பனி அதன் சொந்தக் காட்சியறை மூலம் சார்ப் அலுவலக கருவிமயமாக்கல் தயாரிப்புகளை உங்களுக்கு கிடைக்கச் செய்வதில் பெருமையடைகிறது. உங்களுக்கு எப்போதும் தேவைப்பட்ட சார்ப் அலுவலக கருவிமயமாக்கல் தயாரிப்புகள் அனைத்தையும் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் ஓரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரமாண்டமான
திறப்பு விழா இன்று!
அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்
விஜயம் செய்யுங்கள்
SHARP
அலுவலக கருவிமயமாக்கல்
தயாரிப்புகளை காண்பதற்கு!

பெற்றுக் கொள்ளக்கூடிய வேறு கருவிகள்

SCAN COIN
தாள் காசு எண்ணிக்கையை கணிக்கும் கருவி
நாணய எண்ணிக்கையை கணிக்கும் கருவி

Pitney Bowes
பிட்னி போவேஸ் முத்திரை பொறிக்கும் கருவி

ஏக முகவர்கள்
பிரவுண்ஸ்
குரூப் ஒஃப் கம்பனீஸ்
இல. 89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாடு முழுவதிற்குமான
விற்பனையின் பின் சேவை

Tradlanka

SHARP SHARP SHARP SHARP SHARP SHARP

வன்னி மாவட்ட மாட ,வண்டி
சவாரியாளர்க்ள் நட ந்தும்

## சவாரிப்போட்டி

இடம் : புத்தூர் சவாரி மைதானம்
காலம் : 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி

பார்வையாளர்கள் இலவசமாக
அனுமதிக்கப்படுவார்கள்.

பழக்கடை மூர்த்தி,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

(9227)

---

யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

## புலமைப்பரிசில் பெறுபேறு

| | | | |
|---|---|---|---|
| வே.அஜலக்சன் | 156 | என்.சயந்தன் | 154 |
| சி.பிறைநிலா | 137 | சி.சுகன்யா | 136 |
| சி.டிசானி | 130 | பா.சிவாஜினி | 127 |
| ஏ.கஜாபனா | 125 | பா.சுரேஷ் | 124 |
| எஸ்.மிதுலா | 122 | | |

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், அண்மித்த புள்ளிகளைப் பெற்றவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன், இதற்காக உழைத்த அதிபர், ஆசிரியர்களிற்கும் நன்றி கூறுகின்றோம்.

அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(9223)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி



செல்வி

### சண்முகப்பிரியா பாலசிங்கம்

அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 152 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் 46ஆம் இடத்தைப்பெற்று உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் முதலாவது இடத்தையும் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன், அவரை அறிவூட்டி ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் மற்றும் திரு. வே.துரைசிங்கம் ஆசிரியரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:*
ரஜினி பீடா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்,
*இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.*

(சி-24134)

---

## விவசாய உபகரணம் அன்பளிப்பு

பட்டினிக்கு எதிரான நிறுவனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து மீளக்குடியேறியவர்களுக்கு விவசாய உபகரணங்கள், விவசாய உள்ளீடுகள் ஆகியவற்றைக் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கி வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று பண்டத்தரிப்பு கிராம அலுவலரின் அலுவலகத்தில் வைத்து பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், பிரான்பற்று ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த விவசாயிகளுக்கு மேற்படி விவசாய உபகரணங்களும் உள்ளீடுகளும் வழங்கப்பட்டன. (எ-135)

## கோண்டாவிலில் சுவரொட்டிகள்

குடாநாட்டைவிட்டு ஈ.பி.டி.பியினர் வெளியேறவேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் கோண்டாவில் பகுதி எங்கும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. குறிப்பாக சந்திகள், சன சமூக நிலையங்களை அண்டிய பகுதிகள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. "யாழ் குடாநாட்டு மக்கள்" என்ற பெயரில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஓ)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**உயர் பட்டப் படிப்புகள் பீடம்**

பட்டப்பின் கல்வித்
தகைமை
கற்கைநெறி:
முழுநேரம், பகுதிநேரம் I&II

முழுநேர வகுப்புகள் 16.10.2002 ஆம் திகதியும், பகுதிநேர வகுப்புகள் 19.10.2002ஆம் திகதியும் ஆரம்பமாகின்றன.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
2002.10.07. (C/24137)

---

## இரட்டைகதவு குளிர்சாதனப் பெட்டிகள் தேவை

எமது சங்கத்திற்கு 10 குளிர்சாதனப் பெட்டிகள் தேவை. இவற்றை வழங்கக்கூடியவர்கள் பின்வரும் விவரங்களுடன் கூறுவிலையை 14.10.2002 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். ஒருவர் பலதரப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகளுக்கும் தமது கூறுவிலை சமர்ப்பிக்கலாம். ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேறாக கூறுவிலை சமர்ப்பித்தல்வேண்டும்.

01. குளிர்சாதனப் பெட்டியின் இனம்
02. குளிர்சாதனப் பெட்டியின் உட்பக்க மொத்தக் கன அடி
03. ஆழ் குளிரூட்டியின் உட்பக்க மொத்தக் கன அடி
04. வழங்கக்கூடிய உத்தரவாத காலம்

பொதுமுகாமையாளர்
*யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,*
*திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.*

(சி-24135)

---

யா/மெதடிஸ்த பெ.உ.பாடசாலை
பருத்தித்துறை

## தரம் 6 அனுமதி - 2003

மேற்படி வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களைப் பாடசாலை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவு திகதி: 10.11.2002 - அதிபர்.

(C/24138)

---

## மரண அறிவித்தல்

### திருமதி இராமசாமி பூரணவல்லி

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் நெல்லியான்வீதி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமசாமி பூரணவல்லி நேற்று 08.10.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி (ச.ப.நோ.கூ.ச. முன்னாள் முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் வசந்தன் (புதிய விஞ்ஞான கல்வி நிலையம், யாழ்ப்பாணம்), திருமலர்ச்செல்வி (வேவி - லெபனான்), மதியழகன், திருவருள (லெபனான்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாமதி, மதிவண்ணன் (லெபனான்) ஆகியோரின் மாமியாரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களான துசாந்தி, பிரசாந், தனுசாந்தி, கபில்சாந் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2002) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று திருவடி நிலைக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.வசந்தன் (மகன்)
(நியூ சயன்ஸ் கோல்).

*நெல்லியான் வீதி,*
*சுழிபுரம்.*

(9222)

---


# பிறவுண்ஸ் மீண்டும் யாழ்ப்பாணத்தில்




புத்துயிர் பெறும் யாழ்நகரில் மீண்டும் வேரூன்றுவதையிட்டு பிறவுண்ஸ் நிறுவனம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.
பிறவுண்ஸ் இலெக்ட்ரோனிக்ஸ் ஷாப் இலெக்ட்ரோனிக் சாதனங்கள் உட்பட உலகப்புகழ் வாய்ந்த பல்வேறு வீட்டுப் பாவனை மின்னியல் உபகரணங்களை உங்களுக்கு வழங்குகின்றது. வானொலி–தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள், மைக்ரோவேவ் ஒவன்கள் மற்றும் பல்வேறு சமையலறைச் சாதனங்கள் இவற்றில் அடங்கும்.
பிறவுண்ஸ் விவசாயப் பிரிவு உங்களுக்கு 2 சக்கர, 4 சக்கர உழவு இயந்திரங்களையும் ஏனைய விவசாய உபகரணங்களையும் வழங்குகின்றது.
இன்டர்வெற் பிரிவின் மூலம் உங்கள் வளர்ப்புப் பிராணிகளுக்குத் தேவையான மருந்து வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.
ஷாப் அலுவலக தன்னியக்கப் பிரிவு அதிநவீன தொழில்நுட்பத்தையும் தொழிலகத் தொடர்புகளையும் விருத்திசெய்ய உதவும்.
பிறவுண்ஸ் ஹாட்வெயார் உங்களுக்குத் தேவையான உறுதிமிக்க பலவகைப் பொருட்களை வழங்கும்.
எக்சைட் உங்கள் வீட்டுப் பாவனைக்கு அல்லது வாகனத்திற்கு அவசியமான தரமுயர்ந்த பற்றரி வகைகளை வழங்கும்.
சர்வதேசப் புகழ்பெற்ற வீட்டுப் பாவனை, அலுவலக, விவசாய மற்றும் பலதரப்பட்ட சாதனங்கள் இப்பொழுது உங்கள் வாசலடிக்கு வருகின்றன. பணத்திற்கேற்ற பெறுமதி. இலகுவான கொடுப்பனவு முறைகள். உத்தரவாதங்கள். விற்பனைக்குப் பிந்திய பராமரிப்புச் சேவை என்பன சகிதம் இப் பொருட்களைக் கொள்வனவு செய்ய பிறவுண்சுக்கு வாருங்கள்.

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம் காட்சியறை 2002 ஒக்டோபர் 9 இல்
திறந்துவைக்கப்படும்

Browns
Group of Companies

SHARP Moulinex Cornell Sunrest ELBA EXIDE OLYMPUS SUZUKI TAFE Makita Intervet Landmaster

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் மத்தா ஓடையில் உடன் பயிர் செய்யக்கூடிய நிலையில் 40பரப்புத் தோட்டக் காணியும் கோப்பாய் கிருஷ்ணர் கோயிலடியில் மானிப்பாய் வீதிக்கு தெற்குப்புறம் 23/4 பரப்புக் கடைக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.மோகன், திருநெல்வேலிச சந்தை. T.P.: 070-212988 (9128)

நல்ல இன Dashound நாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராமநாதபிள்ளை (R.C. பாடசாலை அருகில்), முதலியார் வளவு, அளவெட்டி வடக்கு. (9016)

கச்சேரி நல்லூர் வீதியில் 31/2 பரப்புக் காணியில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும்; மேலதிக 21/2 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.தருமலிங்கம், இல.344, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (9176)

60 நாள் நிரம்பிய மூன்று பெண் அல்சேஷன் நாய்க்குட்டிகளும்,1 1/2 வயது நிரம்பிய ஓர் ஆண் அல்சேஷன நாயும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 42/1A, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (9199)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் விற்பனைக்கு உண்டு. இலவசமாகச் சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ப.சுதா, கலைவாணி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (9075)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் (1kg-130/-) தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (9195)

## காணவில்லை

SXA சூலக்குறியீடுள்ள மண்ணிறப் பசுமாடும், இரண்டு வண்டில் மாடும் காணாமற்போய்விட்டது. கண்டவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். K.சின்னம்மா/ரகு/ஈசன், 302/2, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். (9192)

## தவறிவிட்டது

SEC 89402 இலக்கத்தையுடைய பெண்களுக்கான லுமாலா துவிச்சக்கரவண்டி 03.10.2002 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தட்டாதெரு விநாயகர் ஆலயத்திற்கு அருகில் தவறிவிட்டது. இதுபற்றிய விவரம் தெரிந்தோர் தில்லையம்பலம நடேசன், பூநாரி மரத்தடி ஒழுங்கை, மணியங்காடு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (9186)

குப்பிளான் தெற்கு, குப்பிளானைச் சேர்ந்த சின்னத்துரை பார்த்தீபன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.831361344V) முகமாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (9200)

55, குகன் வீதி, அரியாலையைச் சேர்ந்த குமாரகுலசிங்கம் அன்னலட்சுமி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.348580078V), இரண்டு வங்கிப் புத்தகம் (S/A 11239, 46165), ஒய்வூதிய அட்டை (597351V) என்பன நவீன சந்தைக்கும் பஸ்நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: 51, புங்கன்குளம், அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (9211)

## நூல் வெளியீடு

நவராத்திரி விரத காலங்களில் பக்தியுடன் பாடிப்பரவ, பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்ட 'சக்தி தோத்திரப் பாமாலை' வெளிவந்துள்ளது. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். விலை 30/- மட்டுமே. (9158)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கெமரா வகைகள் எலக்ரோனிக் பிளாஸ்கன், பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதல் முதலியன திருத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்திக்கருகில் (மேல்மாடி), யாழ்ப்பாணம். (9085)

## கணக்காளர் தேவை

சைவ போசனமும் ஆலய அனுபவம் உடையவரும் ஆலயத் தொண்டாகக் கருதி கடமை புரியக் கூடியவருமான கணக்காளர் தேவை. விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். க.கதிரேசு (தர்மகர்த்தாக்கள் சார்பில்), மூத்தநயினார் கோயில், ஆனைக்கோட்டை. (9203)

## புதிய இசை வகுப்புகள்

விஜயதசமி அன்று சகல இசை வகுப்புக்களும் ஆரம்பம். தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.நகர்; ஆலடி உயரப்புலம் (வைரவர் கோயிலடி) ஆனைக்கோட்டை; கோப்பாய் மத்தி (பெற்றோல் ஷெட் அருகில்), கோப்பாய். (9217)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள, அதி விசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 17.10.2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். (முன்கூட்டியே பதிவுசெய்யவும்) தொடர்பு: தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9207)

## கோண்டாவிலில் சுவரொட்டி

குடாநாட்டைவிட்டு ஈ.பி.டி.பியினர் வெளியேறவேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் கோண்டாவில் பகுதி எங்கும் பரவலாக ஒட்டப்பட்டிருப்பதைக காணமுடிகிறது. குறிப்பாக சந்திகள், சனசமூகநிலையங்களை அண்டிய பகுதிகள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. "யாழ். குடாநாட்டு மக்கள்" என்ற பெயரில் இந்தச சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஒ)

## கருத்தரங்கு

போரினால் பாதிப்புற்ற சிறுவர்களின் உள, சமூக பராமரிப்பு என்ற தலைப்பிலான கருத்துரை ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ்பாங்ஷால் வீதியில் உள்ள அகவொளி உளவளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது. யாழ்பல்கலைக்கழகப் பேராசிரியர் தயா சோமசுந்தரம் இந்த கருத்துரையை வழங்குவார்.

மேற்படி கருத்துரை நிகழ்வில் பங்குபற்ற விரும்புவோர் இன்று புதன் கிழமைக்கு முன்னர் கச்சேரி-நல்லூர் வீதியில் உள்ள சாந்திகம் அலுவலகத்தில் தமது பெயர் விவரங்களைப பதிவு செய்துகொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

முன்னர் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தமது முத்திரையைப் பதித்த திரு.வே.துரைசிங்கம(அதிபர்) அவர்களின் பிரத்தியேக வழிகாட்டல் வகுப்பில் 2002ஆம ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் பின்வரும் மாணவர்கள் போற்றும் வகையில் புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர்.

| | |
|---|---|
| செல்வி பா.சண்முகப்பிரியா | 152 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வி வை.மதுவந்தி | 144 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வி ம.காயத்திரி | 144 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வி.ஜெ.கீர்த்திகா | 141 (தென்மராட்சிப் பாடசாலை) |
| செல்வி அ.துளசி | 131 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வி இ.நிருபி | 131 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வி ந.நிதர்சனா | 129 (தென்மராட்சிப் பாடசாலை) |
| செல்வி மு.ஜதுநந்தா | 128 (யா/நெல்லியடி அ.மி.பாடசாலை) |
| செல்வன் நா.நந்தகோபன் | 127 (தென்மராட்சிப் பாடசாலை) |
| செல்வி இ.ரேணுஜா | 123 (யா/கெருடாவில் த.க.பாட.) |
| செல்வி கு.சுமங்கலி | 121 (யா/உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்.) |
| செல்வன் சா.ஜீவசங்கரி | 121 (யா/உடுப்பிட்டி அ.மி.கல்.) |
| செல்வி உ.ருசானி | 121 (யா/சாவகச்சேரி இந்து ஆர. பாடசாலை) |
| செல்வன் கு.வேணுகோபு | 120 (யா/உடுப்பிட்டி அ.மி.கல்.) |
| செல்வன் க.புனிதகாந் | 119 (யா/உடுப்பிட்டி அ.மி.கல்.) |

*மேலும் வெட்டுப்புள்ளியை அண்மித்தோர்*

| | |
|---|---|
| செல்வி வ.ஜன்சிகா | 116 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வன் க.கௌதமன் | 116 (தென்மராட்சிப் பாடசாலை) |
| செல்வன் ந.திருமாறன் | 115 (யா/உடுப்பிட்டி அ.மி.கல்.) |
| செல்வி ஆ.நிரோஜா | 110 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வி கு.லேகா | 110 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வி செ.ஜன்சா | 107 (தென்மராட்சிப் பாடசாலை) |
| செல்வி செ.சாந்தினி | 107 (யா/வல்வெட்டி விநாயகர் வித்.) |
| செல்வன் த.துவாரகன் | 106 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |
| செல்வி கி.சர்மிலாதேவி | 104 (யா/உடுப்பிட்டி மகளிர் கல்.) |

இந்த மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் எமது பிள்ளைகளின் வெற்றிக்கு உழைத்த மேற்படி அதிபர் அவர்களையும் பாடசாலைகளில் ஊக்கமளித்த அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

(9205) - பெற்றோர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.ம.சுப்பையா

27.09.2002 அன்று யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவான்களாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டவர்களான வளர்மதி சனசமூக நிலைய முன்னாள் தலைவா திரு.மயிலன் சுப்பையா அவர்களையும் ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் திரு.சின்னையா கந்தசாமி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கலைவாணி சனசமூகநிலையம்**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.



திரு.சி.கந்தசாமி

(9213)

## போட்டோக்கொப்பி இயந்திர உதிரிப்பாகங்கள்

**CANON NP1215**

| | |
|---|---|
| ட்ரம் 1450/- பிளேட் | 700/- |
| மெயின்மோட்டார் கியர் 4 | 975/- |
| டொப்ரோலர் கியர் 4 | 900/- |
| (தனித்தனியாகவும் பெறலாம்) | |
| பெல்ட் 4 | 1300/- |
| பல்ப் (Exposure/Heater (0) | 1750/- |
| டோனர் 1300/(O), | 700/-(0) |

(C/24133)

**CANON NP 2020/2120**
**NP3025/3225 NP 3325/3825**

டோனர் 350g 950/-(0)

இதற்குரிய பலதரப்பட்ட உதிரிப்பாகங்களும் பெறலாம்

SHARP 7800/1016/1118

டோனர் 1450/-(0)

வேறு உதிரிப்பாகங்களுக்கு தொடர்புகொள்க.

KORES டைப்ரைட்டர் ரிபன் 65/-

**லோட்டஸ்**

KOTAHENA MARKET COMPLEX,
COLOMBO - 13, TEL.:440708

## பாராட்டுதலும் வாழ்த்தும்

சமூகசேவையினையும் நல்லியல்புகளையும் பாராட்டும் முகமாக அரசால் வழங்கப்பட்ட அகில இலங்கை சமாதான நீதிவான் என்னும் கௌரவப் பட்டம்பெற்று பெருநிலையடைந்த எங்கள் குடும்பத் தலைவராம்

**உயர்திரு.சி.திரவியம்** அவர்களுக்கு

எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் மிக உள்ளக்களிப்புடன் வழங்குகின்றோம.

*செல்வம் பூங்கா,*
*அல்வாய் வடமேற்கு, அல்வாய்.*

யோ.சிவகரன், சி.மேகலா,
சி.திரன்ஜா.

(9214)

முன்பகுதியால் சுமை ஏற்றும்

## வாகனங்களுக்கான இயக்குநர்கள் தேவை

**த ஹலோ டிரஸ்ட(HALO TRUST)** என்னும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்துக்கு நடுத்தர அளவான சக்கரங்களையுடைய முன்பகுதியால் சுமை ஏற்றும் இயந்திரங்களுக்கான (Medium Wheeled front Loaders) இயக்குநர்கள் உடன்தேவை.

முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 13.10.2002 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும.

**THE HALO TRUST**

655, NAVALAR ROAD,
JAFFNA.
T.P. 222 3779
222 5106.

(9206)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு கந்தையா

*(களஞ்சியக் காப்பாளர், உரக்கூட்டுத்தாபனம்)*

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தையா (07.10.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நோமா இமல்டா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லம்மா, முத்தம்மா, விசாலாட்சி, வேலாயுதம், காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரரும் சறோஜினி (இத்தாலி), சற்குருநாதன் (சவூதி), சற்குணநாதன் (கொழும்பு கிறீன்ஸ்லண்ட் வங்கி முகாமையாளர்), சர்வேஜினி (கொழும்பு), சஜாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவராஜசிங்கம் (இத்தாலி), ஜெயமலர் (மட்டக்களப்பு), சற்குணாதேவி (கொழும்பு), சதானந்தன் (கொழும்பு, இலங்கை வங்கி முகாமையாளர்), பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் தஜானி, துஷானி, யுகேந்திரராஜா, தர்சினி, சிந்துஜா, ஜினோஷா, டிலுக்ஷா, ஹர்ஷா, ஜெனூஷா ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2002) புதன்கிழமை நண்பகல் 12 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சண்டிலிப்பாய் வடக்கு.* (9216) மனைவி, பிள்ளைகள்.

## திருமதி வேலுப்பிள்ளை செல்லம்

நீர்வேலி மேற்கு, மாசிவனைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை செல்லம் நேற்று (08.10.2002) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் இலக்குமியம்மா, இராசரட்ணம் (சோதி ஸ்ரோர்ஸ், வத்தேகம), இராசலிங்கம் (வித்தியா ஸ்ரோர்ஸ், வத்தேகம), நல்லநாதன், சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, இராஜேஸ்வரி, மனோன்மணி, நாகேஸ்வரி, பகீரதி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலநாகேஸ்வரி (ஆசிரியை, மாத்தனை), செல்வராணி (ஆசிரியை, நுவரெலியா), சிவபாலன் (லண்டன்), சிவராசா (கனடா), காலஞ்சென்ற சிவானந்தன், ஞானேஸ்வரி (கனடா), ரவீந்திரன் (ஆராய்ச்சி உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம்), அர்ச்சுனன் (S.O.S. Homo, நுவரெலியா) சசிகலா, சிறிறஜனி, கிருபானந்தன், நிறைஞ்சன், சுஜாதா (ஜேர்மனி), சுபாஸ், கேவா, கிதான்சன், ராகவன், திலீபன், கார்த்திகா, வித்தியா, ஜெயசுதன், சுகந்தா, நித்தியா, தினேஸ்குமார், சபேஸ்குமார், ராஜ்குமார் ஆகியோரின் பேர்த்தியும் அருளினி, மதுராகினி, மதுராகவன், தனுஜன், ஆசா, ரட்சிகா, ரச்சனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2002) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
*நீர்வேலி மேற்கு, நீர்வேலி.* (9212) வே.நல்லநாதன் (மகன்)

# அரும்பொருள்களை காக்க செயலகத்தில் நாளை கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ் குடாநாட்டிலிருந்து தொல்பொருள்களையும் அரும்பொருள்களையும் எடுத்துச் செல்வதைத் தடுக்கும் நடவடிக்கை தொடர்பாகவும், அவற்றை உரியவாறு பேணிப்பாதுகாப்பது தொடர்பாகவும் ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்செயலகத்தில் அரச அதிபர் செபத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதேச செயலர்கள், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், தொல்பொருள் ஆய்வாளர்கள், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர், விரிவுரையாளர்கள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-173)

# கைதிகளை விடுவிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் வீதிப் போக்குவரத்துப் பொலீஸாரினது கெடுபிடிகளுக்கு உள்ளானது. சில மாணவர்களும் பொலீஸாரினால் தாக்கப்பட்டனர். அதனையடுத்து மாணவர்கள் பொலீஸார் மீது கல்லெறிந்தனர். இதனால் பதற்றநிலை ஏற்பட்டது.

உடனே வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அந்த இடத்துக்கு விரைந்து மாணவர்களை சமாதானம் செய்தார். எனினும், மாணவர்கள் தொடர்ந்தும் கல்லெறிவதில் ஈடுபட்டனர். கல் வீச்சில் பொலீஸாரின் தண்ணீர் 'பவுசர்' ஒன்றும் 'டொல்பின்' வான் ஒன்றும் சேதமடைந்தன.

இதேவேளை - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரைத் தாக்கினார் எனக் கூறி கூட்டத்தில் வந்த இளைஞன் ஒருவரைப் பேரணியில் வந்தோர் தாக்கினர்.

இறுதியில் பேரணிகள் அனைத்தும் வவுனியா அரச செயலகத்தை அடைந்தன. அங்கு வவுனியா மேலதிக அரச அதிபர் எஸ்.இரகுநாதபிள்ளையிடம் வெகுஜன ஒன்றியத்தின் தலைவர் சதாசிவம் குலதேவராசாவினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. பேரணியில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

(ம-9)

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
## யாழ். பிராந்திய நிலையம்
### விஞ்ஞானமாணி/கல்விமாணி 2002/2003
### அறிமுக வைபவ அழைப்பு

நாள்: நாளை (10.10.2002) வியாழக்கிழமை
இடம்: யாழ்.பிராந்திய நிலையம், தொழில்நுட்பக்கல்லூரிக்கு அருகில்
**9.00மணி - மங்கள விளக்கேற்றல்.**
**9.15மணி - ஆசியுரை**

★ வை.சுப்பிரமணியக் குருக்கள் - மஞ்சவனப்பதி, கொக்குவில்.
★ மீகஹ விதுரேஞரத்ன தேரர் - விகாராதிபதி, ஸ்ரீ நாகவிகாரை, யாழ்ப்பாணம்.
★ வண.பிதா எவ்.ஆர்.கிருபாகரன் - ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
★ அதி வண.பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் - தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பாணம்.
★ வண.பிதா எல்.பி.நேசகுமார் - அங்கிலிக்கன் திருச்சபை, யாழ்ப்பாணம.
★ அல்ஹாஜ் முகைதீன் ஹாஜியார் - ஜும்ஆ பள்ளிவாசல், யாழ்ப்பாணம்.

9.30 மணி - மாணவர் பதிவுகள் தொடர்ந்து நடைபெறும்.

எந்திரி ச.ஆ.ஞானேந்திரன்,
*இயக்குநர்,*
*யாழ்.பிராந்திய நிலையம்,*
*கொக்குவில், யாழ்ப்பாணம்.*
(9238)

## முக்கிய அறிவித்தல்

**இன்று இடம்பெறும் சேவையில் 20ஆசனங்கள் உள்ளன. முதல் வருபவர்கள் என்ற முன்னுரிமை அடிப்படையில் ஆசனங்கள் வழங்கப்படும். பயணம் செய்ய விரும்புபவர்கள் இன்று பிற்பகல் 2.30மணிக்கு சிங்கள மகாவித்தியாலய மைதானத்துக்கு வரவும்.**

கட்டணம் 1999/= மட்டுமே

**லயன் ஏயர்,**
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-24147)

**எமது நேற்றைய புதிய வீடியோ CD வெளியீடு**
'ஆல்பம்'
(பிரதிகள் உடன் பெறலாம்)
புதிய படப் போஸ்டர்கள் வந்துள்ளன.
**ITN,** பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,யாழ்ப்பாணம்.
(C-241143)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
இன்று மட்டும் (9.10.2002)
**வானத்தைப்போல**
நாளை முதல் (10.10.2002)
*விக்ரம், காவேரி நடிப்பில்*
**காசி**
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C-24140) (ரீகல்)

**ராஜா** யாழ்ப்பாணம்.
மனோஜ், முரளி, பிரதியுக்ஷா நடிப்பில்
இந்திய ஜனாதிபதி விருதுபெற்ற
**கடல்பூக்கள்**
10.30, 2.30, 6.30
(C-24065)

**நாகம்ஸ்** சுன்னாகம்
M.G.R, ராதாசலூஜா நம்பியார் நடிக்க
**இதயக்கனி**
(ரீகல்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)
(9181)

**யாழ்.நகரில் நவராத்திரி, தீபாவளியை முன்னிட்டு**

## DIALOG G.S.M இன்
## விசேட விலைக் குறைப்பு

**DIALOG G.S.M அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு மாத நிறைவின் நெகிழ்ச்சியில் நாம் வழங்கும் விசேட விலைச் சலுகை இன்று (09.10.2002) புதன்கிழமையில் இருந்து வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிட்ட ஒரு சில வாரங்களுக்கு மட்டும் இந்த வாய்ப்புள்ளது.**




புதிதாய் நீங்கள் ஒன்றை வாங்கும் போது, குறைந்த விலையில் பெற்ற அதிர்ஷ்டசாலியாகிறீர்கள்! மேலும் எமது சேவை 03.10.2002இல் இருந்து பருத்தித்துறை, கோப்பாய், அச்சுவேலி, ஆவரங்கால், கைதடி வரையும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. தற்போது சாவகச்சேரியில் புதிய தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டு வருவதால் குடாநாடு முழுவதுமே DIALOG G.S.M இன் சேவை உங்களை வந்தடைகின்றது. எனவே, நீங்களும் உலக வலையமைப்போடு ஒன்றிணையுங்கள். உங்கள் கைகளில் DIALOG G.S.M இருந்தால் இந்த உலகம் முழுவதும் இனி உங்களருகில்..

வேறு இடங்களில் வாங்கப்படும்
DIALOG G.S.M இன் இணைப்புகள் துண்டிக்கப்படும்.

*தலைமைப் பணிமனை:* **THE PHONE SHOP**
இல.204, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.0777 - 110111, 077 - 7734489
(C-24139)

## வேலணை பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல்-2002
### திருத்தம்

ஊரதீவு சிறுவர் பாடசாலை மலசலகூட திருத்த வேலைக்குப் பதிலாக பிறிதொரு வேலை மாற்றம் செய்யப்பட உள்ளதால் இதற்கான கேள்வி கோரல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன். புதிய கேள்வி கோரல் பின்னர் விளம்பரப்படுத்தப்படும்.

**திரு.ந.கருணாகரகுருமூர்த்தி**
தலைவர்,
வேலணை பிரதேச சபை.
(C/24141)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மங்கையர்க்கரசி சுந்தரம்பிள்ளை

மூனாமலை வீதியைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி சுந்தரம்பிள்ளை 7.10.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை சுந்தரம்பிள்ளையின் (முகாமையாளர், இலங்கை வங்கி) அன்பு மனைவியும் திரு.திருமதி நாகலிங்கத்தின் மகளும், திரு.திருமதி அப்பாப்பிள்ளையின் மருமகளும், திருமதி வசந்தரூபி (கனடா), திருமதி செல்லரூபி (கற்பிட்டி), திருநாதன் (வீரகேசரி, கொழும்பு), விஜயலக்சுமி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவானந்தநாதன் (கனடா), மகேசன் (பல் வைத்தியர், கற்பிட்டி), கலைமகள் (கொழும்பு), சிவபாதசுந்தரம் (கனடா) ஆகியோரின் மாமியாரும், மயூரன் (கனடா), துவாரகா, செந்தூரன், நிருத்திகா, ஐங்கரன், பிரணவன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (10.10.2002) வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு கொழும்பில் நடைபெற்று, கனத்தையில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு விலாசம்:*
*சு.திருநாதன் (மகன்),*
*55 1/1 வன்றோயன் வீதி,*
*கொழும்பு - 13*
(9235)

தகவல்:
வ.குகவேள்
கட்டுடை

## திருமதி ஞானம்மா நீக்கிலாப்பிள்ளை

*(இளைப்பாறிய ஆசிரியை, புனித சாள்ஸ் ம.வி.,யாழ்.)*

திருமதி ஞானம்மா நீக்கிலாப்பிள்ளை அவர்கள் 05.10.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து திருப்பலிக்காக இடைக்கல அன்னை ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இல.189, *Vembady Rd.,*
*Jaffna.*
(9237)

தகவல்
ம.நீக்கிலாப்பிள்ளை
(கணவர்)

## சின்னையா மார்க்கண்டு

*(ஓய்வு பெற்ற ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி)*

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மார்க்கண்டு அவர்கள் நேற்று (08.10.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் சடாச்சரம் (ஆசிரியர், மருதானை), நிர்மலா (ஆசிரியர், கொழும்பு), கருணாகரன், சுவர்ணமாலா (சுருக்கெழுத்தாளர், இராமநாதன் கல்லூரி - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவராசா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கொழும்பு), சிவகணநாதன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சி.கனகசபாபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்ப்பாண கல்லூரி - வட்டுக்கோட்டை) அவர்களின் அன்புச் சகோதரரும் மற்றும் அர்ஜுனன், நேரு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2002) புதன்கிழமை பி.ப.3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
(9240)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி
## மரியாம்பிள்ளை அன்னம்மா

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது 128, மவுன்கார்மல் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மரியாம்பிள்ளை அன்னம்மா நேற்று (08.10.2002) செவ்வாய்க்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மரியாம்பிள்ளையின் (சூசைபிள்ளை) அன்பு மனைவியும், பீற்றர் வில்பிறட், காலஞ்சென்றவர்களான றீற்றம்மா, போல் குலசிங்கம் மற்றும் வண.பிதா பி.எம்.இம்மனுவேல் (பங்குத்தந்தை, பாண்டியன் தாழ்வு), அருள்நாதன், விவிட்றிட், சிதம்பரநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி றெஜினா பீற்றர் (இளைப்பாறிய ஆசிரியை), பஸ்ரியாம்பிள்ளை, மரியாம்பிள்ளை, திருமதி மணி குலசிங்கம், திருமதி மரியகொறற்றி அருள்நாதன் (இந்தியா), சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அருட்சகோதரி செலின் அவர்களின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (11.10.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக நாரந்தனை அம்பேதுறு சம்பாவலு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*128, மவுன் கார்மல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(9241)

தகவல்:
அருட்தந்தை பி.எம்.இம்மனுவேல்
(மகன்)

# பிரதமர், பீரிஸ், திலக், மிலிந்த ஜனாதிபதியை நாளை சந்திப்பர்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சர்கள் குழு நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்க விருக்கின்றது.

பிரதமர் ரணிலுடன் அமைச்சர்க ளான ஜி.எல்.பீரிஸ், திலக் மாரப்பன, மிலிந்த மொறகொட ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொள்வர். ஜனாதி பதியுடன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சந்திப்பின் போது பிரசன்னமாகியிருப் பார் என்று அரசு வட்டாரங்கள் தெரி வித்தன.

அரசு - புலிகள் இரண்டாம் கட் டப் பேச்சுகள் எதிர்வரும் 31ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ளதால் அதுபற்றியும், அரசின் சமாதான திட்டங்கள் குறித்தும் சந்திப்பின் போது விரிவாக பேசப்படும் என்கிறது அரச வட்டாரம்.

பிரதமர் ரணில் மீது ஜனாதிபதி அண்மையில் விடுத்த - பகிரங்க - லஞ்சக் குற்றச்சாட்டு பாரிய சர்ச்சையை உண்டு பண்ணியுள்ளது. இதையடுத்து ஜனாதிபதிக்கு எதிராக உடனடியாக குற்றப் பிரேரணையை கொண்டுவர வேண்டும் என்று விசேட அமைச்சர வைக் கூட்டத்தில் பிரதமரை சில அமைச்சர்கள் வற்புறுத்தினர். அதற்கு பிரதமர் பதிலளிக்கையில், ஜனாதிப தியை அடுத்த தடவை சந்திக்கும் போது நேரில் இதுபற்றி கேட்கிறேன் என்று கூறியிருந்தார். ஆகவே, நாளைய சந்திப்பில் இந்த விஷய மும் பேசப்படும் என்று தெரிகிறது.

## முஸ்லிம்களுடன் சந்திப்பு!

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த, மீளக்குடியமரவுள்ள முஸ்லிம் மக்க ளுக்கும் விடுதலைப்புலிகளின் அர சியல்துறையினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இன்று மாலை 5 மணிக்கு நாவாந்துறையில் உள்ள பள்ளிவாச லில் இடம்பெறவுள்ளது. (ம-3)

# இரு புலிகளுக்கும் பிணை; ஆனால் நெருக்கடி தணியவில்லை!

திருகோணமலை கந்தளாயில் வைத்து கடந்த மாதம் படையினரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இரு வரையும் பிணையில் விடுவிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

ஆனாலும், விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள ஆறு படையினரை யும் விடுவிப்பதற்கான வாய்ப்பு இத னால் ஏற்படவில்லை என்று சம்பந்தப் பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், நிபந்தனைகளுடன் தமது உறுப்பினர்கள் விடுவிக்கப் படுவதை தாங்கள் ஏற்கமுடியாது என்று புலிகளின் திருகோணமலைப் பிரிவு அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் புலிகளின் காவலில் உள்ள ஆறு படையினரும் விடுவிக்கப்படுவது தாமதமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

(முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

## தங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உஸ்பெகிஸ்தான் வீராங்கனை பெரி பெலோவா லியூபோவ் 11.38 செக்கன் களில் ஓடி வெள்ளிப்பதக்கத்தையும், சீன வீராங்கனை குயின் வாங்பிங் 11.51 செக்கன்களில் ஓடி வெண் கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆசிய விளையாட்டு விழாவில் சுசந்திகா ஜெயசிங்க தங்கப்பதக் கம் பெற்றமை இதுவே முதல் தட வையாகும்.

பெண்களுக்கான 100, 200 மீற்றர் போட்டிகளில் தாம் தங்கப்ப தக்கம் வெல்வது நிச்சயம் என சுசந்திகா ஏற்கனவே உறுதியளித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுசந்திகா ஜெயசிங்க பங்குபற் றும் 200 மீற்றர் அரையிறுதி போட்டி இன்று முற்பகல் 12.50மணிக்கு நடைபெறவுள்ளது.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருடன் மன்னார் ஆயர் இரா யப்பு ஜோசெப்பும் செல்கிறார்.

தமிழ்க் கைதிகள் விவகாரம் குறித்து மன்னார் ஆயர் இராயப்பு ஜோசெப் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசி னார்.

## பேராதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுத்துறைச் சிறையில் நேற்று எட டாவது நாளாக உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளில் பலரின் நிலை கவலைக்கிடமாக மாறிவருவதாக சிறைத் தகவல்கள் தெரிவித்தன. 24 கைதிகளின் நிலைமை மிக மோச மடைந்துள்ளது.

பதினொரு கைதிகளுக்கு நேற்று 'சேலைன்' ஏற்றப்பட்டது. உணவு உட் கொள்ளுமாறு வைத்தியர்கள் ஆலோ சனை விடுத்த போதும் அதை ஏற்க கைதிகள் மறுத்துவிட்டனர். மட்டக் களப்பு, அநுராதபுரம்-சிறைகளிலும் தமிழ்க் கைதிகளின் உண்ணாவிர தம் நேற்றுத் தொடர்ந்தது. (ம)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கின்றார். சட்டமா அதிபருட னும், மூத்த அமைச்சர்களுடனும் இந்த விவகாரம் குறித்து முதலில் பிரதமர் மந்திரா லோசனை நடத்துவார் எனத் தெரிகிறது.

அதன் பின்னர் தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களையும் அங்கு பிரதமர் சந்திப் பார். இதற்கான அழைப்பு தமிழ்க் கூட் டமைப்பு எம்பிக்களுக்கு நேற்று மாலை விடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

அக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர் மானத்தோடு அரசுப் பிரதிநிதியாக அமைச்சர் மிலிந்த மொறகொட களுத் துறைச் சிறைக்குச் செல்வார். அங் குள்ள தமிழ்க் கைதிகளுடன் அவர் விரிவாக உரையாடுவார்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று மாலை அமைச்சர் மிலிந்த மொறகொட வைச் சந்தித்தனர். அரசுப் பிரதிநிதி யாக களுத்துறைச் சிறைக்குச் சென்று தமிழ்க் கைதிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் விடுத்த கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டார்.

### அச்செழு முகாம் ஊடாகச் செல்லும்

# நீர்வேலி – புன்னாலைக்கட்டுவன் வீதி இன்றுமுதல் பாவனைக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.9

அச்செழு முகாமை ஊடறுத்துச் செல்லும் நீர்வேலி - புன்னாலைக் கட்டுவன் வீதி இன்றுமுதல் பொது மக்கள் பாவனைக்கு திறக்கப்படுவ தாக பலாலி இராணுவத் தலைமைய கம் அறிவித்துள்ளது.

1995ஆம் ஆண்டு அச்செழுவில் 51ஆவது படையணித் தலைமையகம் அமைக்கப்பட்ட பின்னர் அதனை ஊடறுத்துச் சென்ற இந்த வீதி பொது மக்கள் பாவனைக்கு தடைசெய்யப் பட்டிருந்தது.

பொதுமக்களின் நன்மை கருதி இந்த வீதியை மீண்டும் போக்குவரத் துக்குத் திறந்துவிட முடிவு செய்யப் பட்டுள்ளது.கவும் -

இந்தப் பாதை ஊடாக வட பிராந் தியப் போக்குவரத்துச் சபையின் சேவையும் இடம்பெறும் - என்றும் பலாலித் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (ம-3)

## கூட்டமைப்பு கப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில், தமிழ் அரசியல் கைதிகள நிபந தனையின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்தி கூட்டமைப்பு எம்.பி இரா.சம்பந்தன் பேசினார். அவ்வள வோடு விடயம் முடிந்துவிட்டது.

விடுதலை கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும் தமிழ்க் கைதிகள் அனைவரும எந்தவித நிபந்தனையும் இன்றி விடு தலை செய்யப்பட வேண்டும். இல்லை யேல் அரசு மேற்கொண்டுவரும் சமா தான நடவடிக்கைகளுக்கு கைதிக ளின் பிரச்சினை குந்தகமாகவே அமை யும் என்று தமிழர் விடுதலைக் கூட் டணி செயலாளர் நாயகம் இரா.சம் பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

சபையில் வழமையான கேள்வி நேரத்தின் பின் தேசிய முக்கியத்து வம் வாய்ந்த கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்த இரா.சம்பந்தன் எம்.பி மேலும் கூறியதாவது:-

கடந்த ஒரு வாரமாக தமிழ் சிறைக் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால், அரசாங கம் இன்றுவரை இவ்விடயம் தொடர் பாக எவ்வித அக்கறையும் கொள்ள வில்லை.

அரசும் - புலிகளும் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பின் எல்லாத் தமிழ் அரசியல் கைதி களும் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் அரசின் அசமந் தப்போக்கு எமக்குப் பெரும் வேத னையை அளித்துள்ளது.

இப்பொழுது களுத்துறையில் 151 பேரும், மட்டக்களப்பில் 128 பேரும், வெலிக்கடையில் 39 பேரும் ஏனைய சிறைகளில் இருப்பவர்களுமாக 250 பேர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை; விசாரணைகள் இல்லை; நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லப்படவில்லை.

இதனை ஆட்சேபித்து களுத்துறை யில் 139 கைதிகளும், மட்டக்களப்பில் 14 கைதிகளும், வெலிக்கடையில் 12 பெண் கைதிகளும் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

களுத்துறைச் சிறையில் 17 பேர் இரத்த வாந்தி எடுக்கின்றனர். ஏழு பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது. 40 பேர் மயக்க நிலை யில் இருக்கின்றனர். மட்டக்களப்பில் 4 பேர் மயக்கமடைந்துள்ளனர். 2 பேர் மருத்துவ சிகிச்சை பெறவும் மறுத்து போராட்டம் நடத்துகின்றனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் 12 பெண் கைதிகள் உயிராபத்தான நிலையில் இருக்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற போர்வையில் அரசாங்கமும் இராணு வமும் பொலீஸாரும் தமிழர்களை சித்திரவதைக்கு உள்ளாக்கி வருவ தாகவே நாம் கருதுகின்றோம்.

அப்பாவிகளான தமிழ் அரசியல் கைதிகளை சிறையில் அடைத்து சித் திரவதை செய்யும் அரசு, குமரபுரம், மயிலந்தனை, பிந்துனுவெவ ஆகிய பிரதேசங்களில் மனிதப் படுகொலை களைச் செய்தவர்களை விடுதலை செய்துள்ளது. இந்த மாற்றாந்தாய் போக்கு இனியும் வேண்டாம்.

இவ்விடயம் தொடர்பாக ஓரிரு நாள் களில் பிரதமருடன் பேச விருக்கின் றோம்

- இவ்வாறு இரா.சம்பந்தன் கூறி னார்.

(ம)




எமது புதிய வீடியோ CD வெளியீடு
'அல்பம்'
பிரமிட் & Five star
V.C.D. வெளியீடு
மன்
நம்ம வீட்டுக்கல்யாணம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம் (C-24146)

இரசாயனவியல்
அற்வொளி
PAPER CLASS
(முழு அலகும் உள்ளடங்கியது)
DIAS B.Sc.(Hons) Spl.in Che.
செவ்வாய் 6.15 a.m
வியாழன் 6.15 a.m
ஆரம்பம்: 10.10.2002 (வியாழன்)
(9109)

புதிய கணனி
வகுப்புகள்
Dip. in Ms Office
ஆரம்பம்: 12.10.2002
மாலை 5 மணி
UNIVAC
College of Computer
Information Technology
SITHANKERNY
(9204)

கண்ணீர் அஞ்சலி
எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான



நாகமுத்து மார்க்கண்டு
அவர்கள் 01.10.2002இல் காலமானதையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக் கையாக்கி அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
பேறாமகன், மருமகன்.
(9201)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.